www.kanimaths.com

# 9

## கல்வியில் சீரமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான இலக்குகளை அடைய உதவுதல்

# THIRAN

(Targeted Help for Improving Remediation & Academic Nurturing)

www.kanimaths.com

# தமிழ்

## ஆசிரியர் கையேடு

பள்ளிக் கல்வித்துறை
தமிழ்நாடு அரசு

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

தமிழ்நாடு அரசு

முதல் பதிப்பு – 2025

**பாடப்பொருள் உருவாக்கம்**

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்

© SCERT 2025

ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

**நூல் அச்சாக்கம்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல்
பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 2 8/14/2025 6:10:11 PM

# இந்திய அரசமைப்பு

## முகப்புரை

**இந்திய மக்களாகிய நாம், இந்திய** நாட்டினை **இறையாண்மையும் சமநலச்சமுதாயமும் சமயச்சார்பின்மையும் மக்களாட்சிமுறையும்** அமைந்ததொரு **குடியரசாக நிறுவவும்,**

அதன் குடிமக்கள் அனைவரும்
சமுதாய, பொருளியல், அரசியல், **நீதி;**
எண்ணம், அதன் வெளியீடு, கோட்பாடு,
சமயநம்பிக்கை, வழிபாடு இவற்றில் **தன்னுரிமை;**
சமுதாயப்படிநிலை, வாய்ப்புநலம் இவற்றில் **சமன்மை**
ஆகியவற்றை எய்திடச் செய்யவும்;

அவர்கள் அனைவரிடையேயும்
தனி மனிதனின் மாண்பு, நாட்டுமக்களின் ஒற்றுமை,
ஒருமைப்பாடு இவற்றை உறுதிப்படுத்தும்
**உடன்பிறப்புரிமையினை** வளர்க்கவும்;

உள்ளார்ந்த உறுதியுடையராய்,
**நம்முடைய அரசமைப்புப் பேரவையில்,** 1949 நவம்பர் இருபத்தாறாம் நாளாகிய இன்று, **ஈங்கிதனால், இந்த அரசமைப்பினை** ஏற்று, இயற்றி, **நமக்கு நாமே வழங்கிக்கொள்கிறோம்.**

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

## உள்ளே செல்லும் முன்...

வளர்ந்துவரும் தொழில்நுட்ப உலகில் அறிவோடு சிந்தனையும் பெற்ற தலைமுறையாக மாணவர்களை உருவாக்கும் நிலையில் இயங்கி வருகிறோம். கல்வி அறிவைப்பெற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் இன்றியமையாதவை. மொழித்திறன்களில் வலுவான அடித்தளம் அமையப் பெற்ற மாணவர்களால் எத்தகு பாடப்பொருளையும் இலகுவாகப் பயில முடியும். அதற்கான முயற்சிகளுள் ஒன்றே இந்த ஆசிரியர் கையேடு.

ஒவ்வொரு வகுப்பிலும் மாணவர்கள் பல்வேறு கற்றல் நிலையில் இருக்கக்கூடும். ஒரே வகுப்பிற்குள்ளேயே மெல்லக் கற்கும் மாணவரும் விரைவாகக் கற்கும் மாணவரும் சராசரியாகக் கற்கும் மாணவரும் இருக்கலாம். இவர்கள் தங்கள் கற்றல் நிலையிலிருந்தே அடிப்படை மொழித்திறன்களில் வலுப்பெறவும் அடுத்தடுத்த வகுப்புநிலைத் திறன்களில் வளம்பெறவும் மொழிப்பாடத்தை எவ்வாறு கற்பிக்கலாம் என்ற வழிகாட்டுதல் இக்கையேட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மொழித்திறன்கள், வகுப்புநிலைத் திறன்கள் சார்ந்த பாடப்பொருளைச் செயல்பாடுகளின் வாயிலாக வகுப்பறையில் எவ்வாறு கற்பிக்கலாம் என்பதற்கான வழிகாட்டலாக ஆசிரியர் கையேடு உருவாக்கப்பட்டுள்ளது.

செயல்பாடுகள்வழிப் பாடப்பகுதிகளை உணர்ந்துகொண்ட மாணவர்கள் செய்து பழக மாணவர் பயிற்சிநூல் உருவாக்கப்பட்டுள்ளது.

அடிப்படை மொழித்திறன்கள் 15 தலைப்புகளில் உருவாக்கப்பட்டுள்ளன.

**ஒவ்வொரு அலகும் பின்வரும் வரிசை முறையில் கட்டமைக்கப்பட்டுள்ளன.**

- கற்றல் விளைவு
- சொற்கள், தொடர்களைப் படித்தல்
- கற்பித்தல் செயல்பாடு
- பயிற்சி நூல் செயல்பாடு
- சொல்லக்கேட்டு எழுதுதல்
- விரைந்து முடித்த மாணவர்களுக்கு
- கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

**வகுப்புநிலைத் திறன் சார்ந்த பாடப்பொருள் 10 தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு அலகும்,**

- கற்பித்தல் செயல்பாடு (ஆசிரியர் கையேடு)
- பயிற்சிகள் (பயிற்சி நூல் செயல்பாடு)

என்னும் வகையில் அமைந்துள்ளன.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 4 8/14/2025 6:10:12 PM

www.kanimaths.com

# உள்ளடக்கம்


| தலைப்பு | பக்க எண் | கற்பித்தல் மாதம் | கற்பித்தல் நாள்கள் |
|---|---|---|---|
| அடிப்படை மொழித்திறன்கள் | 1 | ஆகஸ்டு, செப்டம்பர் | 30 நாள் (90 நிமிடம்) |
| வகுப்புநிலைத் திறன்கள் | 44 | செப்டம்பர்–பிப்ரவரி | 20 நாள் (40 நிமிடம்) (வாரத்திற்கு ஒரு பாடவேளை) |


www.kanimaths.com




குறிப்பு : மாணவர்கள், பயிற்சி நூலில் ஒவ்வோர் அலகின் பயிற்சிகளைச் செய்து முடித்தபின், நட்சத்திரக் குறியீட்டிற்கு வண்ணமிடச் செய்யுங்கள். ஒவ்வொரு பயிற்சியை முடித்தபிறகு பயிற்சித்தாளில் நாளைக் குறிப்பிடுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

THIRAN_Tamil_9th_THB_2025 .indd 5 8/14/2025 6:10:12 PM

www.kanimaths.com

# அடிப்படை மொழித்திறன்கள்

1. எழுத்துகளை அறிதல் – 1 ........ 1
2. எழுத்துகளை அறிதல் – 2 ........ 3
படித்துப் பழகுதல் ........ 5
3. அகரவரிசைப்படுத்துதல் ........ 18
4. சொல் உருவாக்குதல் ........ 19
5. பெயர், வினை ........ 21
6. திணை, பால் ........ 23
7. எண் ........ 25
8. இடம், காலம் ........ 27
9. சுட்டு, வினா ........ 29
10. அடைமொழி ........ 31
11. தொடரமைப்பு ........ 33
12. இணைப்புச்சொல் ........ 35
13. இரட்டைச்சொல் ........ 37
14. இணைமொழி ........ 38
15. மயங்கொலி ........ 39
இணைப்பு – (சொற்பட்டியல், தொடர்ப்பட்டியல்) ........ 41, 42



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 6
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:14 PM

www.kanimaths.com

## அடிப்படை மொழித்திறன்கள்

| வ. எண் | தலைப்பு | நாள் | பாடப்பொருள் | கற்றல் விளைவு |
|---|---|---|---|---|
| 1 | எழுத்துகளை அறிதல் – 1 | 1, 2 | உயிர், மெய், உயிர்மெய் எழுத்துகள் (அ–ஊ வரிசை) | 103. மொழியில் உள்ள ஒலிகள், சொற்களைக் கொண்டு விளையாடி மகிழ்தல் – (எ.கா.) படம், மடம், குடம் |
| 2 | எழுத்துகளை அறிதல்– 2 | 3,4 | உயிர்மெய் எழுத்துகள் (எ–ஔ வரிசை) | 107. எழுத்துகள், சொற்கள், தொடர்களைக் கேட்டும் / படித்தும் புரிந்துகொண்டு பேசுதல், எழுதுதல்.<br>716. மொழிமரபின் நுட்பமான கூறுகளையும் (சொல்லுக்கு முதலில், இறுதியில் வரும் எழுத்துகள்) சொல், சொற்றொடர் போன்றவற்றின் பொருளையும் தமது உரையாடலில் வெளிப்படுத்துதல். |
| 3 | அகரவரிசைப் படுத்துதல் | 5, 6 | அகராதியில் பொருளறிதல் | 505, 614. சொற்களின் பொருளை அகராதிகளில் கண்டறிதல்.<br>714. ஆசிரியர்/ வகுப்புத்தோழர் உதவியை நாடியும் பார்வை நூல் துணைகொண்டும் பாடப்பொருளில் தெளிவு பெறுதல்.<br>813. அகராதி, கலைக்களஞ்சியம் போன்ற பார்வை நூல்களைத் தாமாகவும் பிறர் உதவியுடனும் பயன்படுத்துதல். |
| 4 | சொல் உருவாக்குதல் | 7,8 | மொழிவிளையாட்டுகள் | 409. ஒரு பொருள் தரும் பல்வேறு சொற்களுக்கு இடையேயுள்ள நுட்பமான வேறுபாடுகளை அறிந்து பயன்படுத்துதல்.<br>412. புதிய சொற்களின் பொருளை உணர்ந்து அவற்றைத் தங்கள் எழுத்துகளில் பயன்படுத்துதல். |
| 5 | பெயர், வினை | 9,10 | அறுவகைப் பெயர்ச்சொல், வினைச்சொல் | 503, 506. மொழியின் இலக்கணக் கூறுகளைப் (திணை, பால், எண், இடம், காலம், சுட்டு, வினா, பெயர், வினை, அடைமொழி, தொடரமைப்பு, இரட்டைச்சொல், இணைமொழி, இணைப்புச்சொல், மயங்கொலி) புரிந்துகொண்டு பேசுதல், அவற்றைத் தம் எழுத்துகளில் பயன்படுத்துதல்.<br>611. மொழியின் நுட்பங்களான இலக்கணக்கூறுகள், மரபு, நடை போன்றவற்றைப் புரிந்துகொண்டு பாடல்கள், கதைகள், கட்டுரைகளின் நயம் பாராட்டல்.<br>720. சொல், தொடர், மரபுத்தொடர், நிறுத்தக்குறி போன்றவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி எழுதுதல். (ஆண்டுவிழா அழைப்பிதழ், கடிதம், கட்டுரை, உரையாடல், விழிப்புணர்வு வாசகங்கள் போன்றவை) |
| 6 | திணை, பால் | 11, 12 | இருதிணை– ஐம்பால் | |
| 7 | எண் | 13, 14 | ஒருமை, பன்மை | |
| 8 | இடம், காலம் | 15, 16 | மூவிடம், முக்காலம் | |
| 9 | சுட்டு, வினா | 17, 18 | சுட்டு, வினா எழுத்துகள் | |
| 10 | அடைமொழி | 19, 20 | பெயரடை, வினையடை | |
| 11 | தொடரமைப்பு | 21,22 | தொடரின் அமைப்பை அறிதல் | |
| 12 | இணைப்புச்சொல் | 23,24 | இணைப்புச் சொற்கள் | |
| 13 | இரட்டைச்சொல் | 25,26 | இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் | |
| 14 | இணைமொழி | 27,28 | நேரிணை, எதிரிணை, செறியிணை | |
| 15 | மயங்கொலி | 29,30 | மயங்கொலி எழுத்துகள், சொற்கள் | |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# அடிப்படை மொழித்திறன்கள்

### பயிற்சிநூலின் நோக்கங்கள்

- ✦ சொற்கள், தொடர்களைப் படித்தலில் பயிற்சிபெறுதல் (படித்துப் பழகுதல்)
- ✦ அடிப்படை மொழித்திறன்களில் வலுப்பெறுதல்

### பயிற்சிநூல் பயிற்சிகளை மேற்கொள்ளும் முறை

- ✦ **மாணவர் ஒருவர் தொட்டுக்காட்ட, அடுத்த மாணவர் உடனுக்குடன் சரியாகப் படிக்க வேண்டும்.**
- ✦ **அனைத்துச் சொற்களையும் ஒரே மூச்சில் விரைவாகப் படிக்க வேண்டும்.**
- ✦ மாணவர்கள் இருவராக இணைந்து / சிறுகுழுவாகச் சேர்ந்து பயிற்சிகளைச் செய்யலாம்.
- ✦ படிப்பதற்குத் தடுமாறும் மாணவர்களுக்கு ஆசிரியரோ / மீத்திறன் மாணவரோ வழிகாட்டலாம்.

மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்பப் **படித்துப் பழகுதல்** பகுதியில் இடம்பெறும் சொற்கள், தொடர்களை நாள்தோறும் சொல்லக்கேட்டு எழுதச் செய்யுங்கள்.

www.kanimaths.com

### சொல்லக்கேட்டு எழுதுதல்

- ✦ சொல்லக்கேட்டு எழுதுதலை மாணவர்கள் எழுதி முடித்தவுடன் ஒவ்வொரு சொல்லாகக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- ✦ மாணவர்கள் எழுதியதை அவர்களையே சரிபார்த்துக்கொள்ளச் செய்யுங்கள். இவ்வாறாக அனைத்துச் சொற்களையும் எழுதிச் சரிபார்த்த பிறகு எத்தனை சொற்கள் சரியாக எழுதினர் என்பதைக் கூறச்செய்யுங்கள்.
- ✦ நாம் சரிபார்த்துத் தரும்போது என்ன பிழை நேர்ந்தது என்பதை மாணவர்கள் உற்றுநோக்கவும் சரிசெய்யவும் வாய்ப்பு இல்லை. அவர்களே சரிபார்க்கும்போது நாளடைவில் பிழைகள் குறையும். இம்மாற்றத்தை மாணவர்களுக்குத் தெரியாமல் உற்றுநோக்குங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 8 8/14/2025 6:10:15 PM

# 1 எழுத்துகளை அறிதல் – 1

நாள் : 1, 2

## கற்றல் விளைவு

- எழுத்துகள், சொற்கள், தொடர்களைப் படிப்பர்; எழுதுவர்.

### 1 ஒரு நிமிடக்கதை

- மாணவர்களை எண்ணிக்கைக்கேற்ப இரண்டு / நான்கு குழுவாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் 5 நிமிடத்தில் தங்களுக்குள் கலந்துரையாடி, ஒரு நிமிடக் கதையை உருவாக்கக் கூறுங்கள்.
- முதல் குழுவினர் உருவாக்கிய, ஒரு நிமிடக்கதையைக் கூறும்போது, இரண்டாம் குழுவினர் கதைநிகழ்வு, அவற்றில் இடம்பெறும் சொற்களைக் கவனமாகக் கேட்கவேண்டும் என்பதைக் கூறுங்கள்.
- கதையைக் கேட்கும்போதே இரண்டாம் குழுவினர் ஒவ்வொருவரையும் தங்கள் குறிப்பேட்டில் உயிரெழுத்து, மெய்யெழுத்து இடம்பெற்ற சொற்களை இயன்றளவு எழுதச் செய்யுங்கள்.
- தாங்கள் எழுதிய சொற்களில் ஒரே உயிர், மெய்யெழுத்து மீண்டும் இடம்பெறாதவாறு சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கரும்பலகையில் எழுதச் செய்யுங்கள்.
- அடுத்து இரண்டாம் குழுவினர் கதையைக்கூற, முதல் குழுவினரை மேற்கூறியவாறே சொற்களை எழுதச் செய்யுங்கள்.
- எந்தக் குழுவினர் 12 உயிர், 18 மெய்யெழுத்துகளில் அதிகளவு எழுத்துகள் இடம்பெறுமாறு சொற்களை எழுதினார்களோ அக்குழுவினரே வெற்றி பெற்றவராவர்.
- கரும்பலகையில் உள்ள சொற்பட்டியலில் பதினெட்டு மெய்யெழுத்துகளில் விடுபட்டவற்றிற்கும் மாணவர்களிடமே கேட்டு, அவற்றையும் எழுதச் செய்யுங்கள்.

### 2 நினைத்த சொல்லைக் கண்டுபிடித்தல்

- மாணவர்களை இரு குழுவாகப் பிரியுங்கள்.
- ஏதேனும் ஒரு சொல்லின் முதல் எழுத்தை மட்டும் கரும்பலகையில் எழுதுங்கள். அச்சொல் எத்தனை எழுத்துகளைக் கொண்டது என்ற குறிப்பை மட்டும் கூறி, மாணவர்களையே ஊகித்துச் சொல்லைக் கண்டுபிடிக்கச் சொல்லுங்கள்.
- இரு குழுவினரும் ஊகித்து ஆளுக்கு ஒரு சொல்லைக் கூறலாம். நீங்கள் நினைத்த சொல்லை ஊகித்துச் சரியாகக் கூறினர் எனில் அக்குழுவினருக்கு மதிப்பெண் அளிக்கலாம்.
- இரு குழுவினரும் சரியாகக் கூறவில்லை எனில் இரண்டாவது எழுத்தையும் எழுதுங்கள். இவ்வாறு கண்டுபிடிக்கும் வரை ஒவ்வொரு எழுத்தாகச் சேர்த்து எழுதுங்கள். முதல் இரண்டு எழுத்துகளிலேயே கண்டுபிடித்தால் பாராட்டுங்கள்.
- அடுத்தடுத்த சொற்களுக்கும் இவ்வாறே செயல்படுத்துங்கள்.
- இச்செயல்பாட்டிற்குப் பின்வரும் பட்டியலில் உள்ள சொற்களைப் பயன்படுத்தலாம்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 1 8/14/2025 6:10:15 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

### சொற்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| பாரி | நீர்வீழ்ச்சி | நீந்தினார் | எறும்புப்புற்று |
| மாநாடு | நந்தவனம் | வரைந்தார் | கூட்டுமுயற்சி |
| நாடகம் | இயந்திரம் | சீத்தாப்பழம் | சிலப்பதிகாரம் |
| காலணி | வாடாமல்லி | ஆம்பல்மலர் | புல்லாங்குழல் |
| ஊருணி | குளிரூட்டி | வானூர்திகள் | பனங்கற்கண்டு |
| உள்ளூர் | விருந்தாளி | குண்டூசிகள் | மின்மினிப்பூச்சி |
| களிமண் | வாழ்த்தினர் | புள்ளிவண்டு | தண்ணீர்க்குடம் |
| விண்மீன் | சுக்குப்பால் | மாம்பழச்சாறு | திண்டுக்கல்பூட்டு |
| எழுதியது | நூற்றாண்டு | பல்லாங்குழி | தூக்கணாங்குருவி |

அலகு 1இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

- உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், அ வரிசை முதல் ஊ வரிசை வரையிலான உயிர்மெய் எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் படிக்க முடிவதை உறுதி செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

1. தொடரின் அனைத்துச் சொற்களும் உயிரெழுத்தில் தொடங்குமாறு எழுதுக.

   (எ.கா.) அறிவியல் ஆத்திசூடி எழுதினார்.

   ஊஞ்சல் உயரத்தில் இருந்தது.

2. ஒவ்வொரு சொல்லிலும் மெய்யெழுத்து இடம்பெறும் தொடர்களை எழுதுக.

   (எ.கா.) பல்லவர்கள் சிங்கத்தைத் தங்களது சின்னமாகக் கொண்டார்கள்.

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

- தமிழ்மொழியில் 247 எழுத்துகள் உள்ளன.
- அவை, உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து ஆகியனவாகும்.

**உயிரெழுத்துகள் – 12** : அவை குறில், நெடில் என இருவகைப்படும். குறுகிய நேரம் ஒலிப்பது **குறில் எழுத்து**; அதுபோல் இருமடங்கு நேரம் ஒலிப்பது **நெடில் எழுத்து**.

உயிர் குறில் எழுத்துகள் – 5 : அ, இ, உ, எ, ஒ

உயிர் நெடில் எழுத்துகள் – 7 : ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ

**மெய்யெழுத்துகள்** – 18 (வல்லினம், மெல்லினம், இடையினம்)

**வல்லின எழுத்துகள்** 6 : க், ச், ட். த, ப், ற்

**மெல்லின எழுத்துகள்** 6 : ங், ஞ், ண், ந், ம், ன்

**இடையின எழுத்துகள்** 6 : ய், ர், ல், வ், ழ், ள்

**உயிர்மெய் எழுத்துகள்** – 216 (குறில் – 5 x18 = 90, நெடில் –7 x 18 = 126)

**ஆய்தவெழுத்து** – 1 : ஃ

மேற்கண்ட விளக்கங்களை அளிக்க எழுத்து வரிசை அட்டவணையைப் பயன்படுத்தலாம்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 2 8/14/2025 6:10:15 PM

# 2 எழுத்துகளை அறிதல் – 2


நாள் : 3, 4

## கற்றல் விளைவு

◈ எழுத்துகள், சொற்கள், தொடர்களைப் படிப்பர்; எழுதுவர்.

## 1 எழுத்து எது?

- மாணவர்களை எண்ணிக்கைக்கு ஏற்ப இரண்டு / மூன்று குழுவாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.
- 'அ' வரிசை உயிர்மெய் எழுத்துகளில் ஓர் எழுத்தைக் கரும்பலகையில் எழுதிக்கொள்ளுங்கள். **(எ.கா.)** ச
- நீங்கள் அந்த எழுத்திற்கு எழுத்துக் குறியீட்டைச் சேர்த்து வேறு எழுத்தாக உருவாக்குங்கள். அது எந்த எழுத்து எனக்கூற ஒவ்வொரு குழுவினருக்கும் வாய்ப்பு அளியுங்கள்.
- எழுத்துக் குறியீடுகளை மட்டும் மாற்றி, குறியீடுகளைச் சேர்த்து எழுத்துகளை உருவாக்கிக் கேளுங்கள்.




- நீங்கள் குறியீடுகளைச் சேர்த்து எழுத்துகளை உருவாக்கியது போலவே ஒரு குழுவினர் உருவாக்க மற்றொரு குழுவினர் அந்த எழுத்தைக் கூறவும் வழிகாட்டுங்கள்.

## 2 படித்துக் கண்டுபிடித்தல்

பின்வரும் சொற்பட்டியலைக் கரும்பலகையில் / விளக்கத்தாளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

உங்கள் மாணவர்களின் கற்றல் நிலைக்கேற்பச் சொற்களின் எண்ணிக்கையைத் தேவைக்கேற்ப எழுதியும் பயன்படுத்தலாம்.

### சொற்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| ஓடுதளம் | மனிதநேயம் | சேற்றுவயல் | துடித்தெழுந்தார் |
| பொம்மை | பெருங்காயம் | பேரீச்சம்பழம் | செயற்கைக்கோள் |
| கௌதாரி | வயல்வெளி | தைப்பொங்கல் | சோளக்கொல்லை |
| அறநெறி | குயிலோசை | சுவரொட்டிகள் | உண்ணாநோன்பு |
| வெகுமதி | சொல்லிப்பார் | பாடிச்சென்றது | சேமிப்புக்கிடங்கு |
| கற்றாழை | நெல்லிக்கனி | செம்மண்நிலம் | கௌதாரிப்பறவை |
| தேனருவி | மேகக்கூட்டம் | நெற்களஞ்சியம் | ஆழிப்பெருங்கடல் |
| வௌவால் | கோவைப்பழம் | தென்றல்காற்று | செம்பியன்மாதேவி |
| நொடிமுள் | வேடந்தாங்கல் | மேலைநாட்டவர் | குடவோலைமுறை |
| கைப்பந்து | மௌவல்மலர் | பௌர்ணமிநிலா | திராட்சைக்கொத்து |
| தேன்சிட்டு | வைகையணை | முழக்கத்தொடர் | வேர்க்கடலைச்செடி |
| நேர்காணல் | கோவைக்கொடி | தொலைக்காட்சி | போக்குவரத்துக்கழகம் |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 3 8/14/2025 6:10:15 PM

www.kanimaths.com

1. தாவரம் தொடர்புடைய சொற்கள் எவை?
2. உணவுப் பொருள்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.
3. வானம் என்பதை நினைவுபடுத்தும் சொற்கள் எவை?
4. எவையெல்லாம் பறவை சார்ந்த சொற்கள்?
5. பண்டிகையின் பெயரைக் குறிக்கும் சொல் எது?
6. நீர்நிலையின் பெயரைப் படித்துக்காட்டுக.
7. நான்கெழுத்துச் சொற்களைக் கூறுக.
8. பறவைகளின் சரணாலயம் என்று அழைக்கப்படும் சொல் எது?
9. கனிகளைக் குறிக்கும் பெயர்கள் எவை?
10. வினைச்சொற்களைப் படித்துக்காட்டுக.

- சொற்பட்டியல் சார்ந்து மேற்கண்டவாறு வினாக்களைக் கேட்டு, மாணவர்கள் சொற்களைப் படிக்கப் பயிற்சி அளியுங்கள்.
- மாணவர்களைக் குழுவாகப் பிரித்து, ஒரு குழுவினருக்கு ஒரு வினா என்றவாறும் இச்செயல்பாட்டினை நிகழ்த்தலாம்.

அலகு 2இல் உள்ள பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ உயிரெழுத்துகள், மெய்யெழுத்துகள், அ வரிசை முதல் ஔ வரிசை வரையிலான எழுத்துகளைக் கொண்ட சொற்களைப் படிக்க முடிவதை உறுதி செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

இரண்டு / மூன்று / நான்கு எழுத்துச் சொற்கள் மட்டும் அமையுமாறு தொடர்களை எழுதுக.

(எ.கா.) மேலே நிலா பார்.
சிறு இலை கொடு.

மரம் தந்த நிழல்.
சிற்பி தந்த பொம்மை எங்கே?

காட்டில் வாழ்ந்த விலங்கு.
சிறுவன் பட்டம் செய்தான்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 4
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:16 PM

www.kanimaths.com




- அலகு 3முதல் 8வரையில் **படித்துப் பழகுதல்** பகுதியின் சொற்பட்டியலை வினாக்கள் கேட்டுப் படிக்கப் பயிற்சி செய்யும் வகையில் முதல் செயல்பாடு கொடுக்கப்பட்டுள்ளது.
- அச்செயல்பாட்டின்போது மாணவர்கள் சொற்களைப் பலமுறை படிப்பர். அடுத்து, சொற்பட்டியலின் கீழ் இடம்பெற்றுள்ள வினாவிற்கு விடையளிக்கும்போதும் சொற்களைப் படிப்பர். இச்செயல்பாட்டின்வழி, மாணவர்கள் படித்தலுடன் பொருள்புரிந்து படித்தல் திறனையும் பெறுவர்.
- அலகு 1,2இல் எளிய சொற்கள், தொடர்களைப் படிக்கப் பயிற்சிபெற்ற பின்னரும் சொற்கள், தொடர்களைப் படிக்க இடர்ப்படும் மாணவர்கள் இருப்பின், **படித்துப் பழகுதல்** பகுதியில் மீண்டும் மீண்டும் பயிற்சிபெறச் செய்யுங்கள்.

- மாணவர் ஒருவர் படித்துப் பழகுதல் பகுதியிலுள்ள சொற்களைத் தொட்டுக்காட்ட, அடுத்த மாணவர் உடனுக்குடன் சரியாகப் படிக்க வேண்டும்.
- அனைத்துச் சொற்களையும் ஒரே மூச்சில் விரைவாகப் படிக்க வேண்டும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 5 8/14/2025 6:10:16 PM

# படித்துப் பழகுதல் – 1

| | | | |
|---|---|---|---|
| தட/களம் | களாக்/காய் | வா/டா/மலர் | தங்/கப்/பதக்/கம் |
| கட்/டகம் | வள்/ளல்/கள் | பழ/மரங்/கள் | மணற்/பாங்/கா/ன |
| மரங்/கள் | பட்/டங்/கள் | ஆம்/பல்/மலர் | மா/நக/ரக்/கா/வல் |
| அன்/பா/ன | உழ/வர்/கள் | கல்/மண்/டபம் | மக்/கள்/மன்/றம் |
| தாழ்ப்/பாள் | நா/வற்/பழம் | கா/வல்/கா/ரர் | மஞ்/சள்/மலர்/கள் |
| கலக்/கம் | சந்/தன/மரம் | பள/பளப்/பா/ன | மட்/பாண்/டங்/கள் |
| ஏ/லக்/காய் | அடர்/மஞ்/சள் | வழ/வழுப்/பா/ன | வண்/ணப்/பட்/டம் |
| பா/கற்/காய் | கண்/டங்/கள் | வண்/ணங்/கள் | நா/டக/மாந்/தர்/கள் |

## சொற்பட்டியல்

| | | | | |
|---|---|---|---|---|
| வற்றல் | ஈச்சமரம் | உண்டான் | காவல்காரர் | நல்லபழக்கம் |
| தங்கம் | பாகற்காய் | நாவற்பழம் | கல்மண்டபம் | பழக்கவழக்கம் |
| ஔடதம் | அண்ணன் | வாடாமலர் | அடர்மஞ்சள் | மாநகரக்காவல் |
| மரங்கள் | ஏலக்காய் | சந்தனமரம் | வழவழுப்பான | மஞ்சள்மலர்கள் |
| கட்டகம் | பட்டங்கள் | பழமரங்கள் | வண்ணங்கள் | மணற்பாங்கான |
| தடகளம் | வள்ளல்கள் | கண்டங்கள் | தங்கப்பதக்கம் | வண்ணப்பட்டம் |
| கலக்கம் | நந்தவனம் | பளபளப்பான | அடர்ந்தவனம் | நாடகமாந்தர்கள் |
| ஏற்றம் | களாக்காய் | ஆம்பல்மலர் | மக்கள்மன்றம் | மட்பாண்டங்கள் |
| அன்பான | உழவர்கள் | மரஊஞ்சல் | அழகானமலர் | வண்ணமயமான |

**ஒரே எழுத்து இரண்டு முறை இடம்பெற்ற சொற்களை எடுத்து எழுதுக.**



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 6 8/14/2025 6:10:16 PM

www.kanimaths.com

**படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.**



## வனம்

அடர்ந்த வனம்.
மரங்கள் உள்ள அடர்ந்த வனம்.
பழ மரங்கள் உள்ள அடர்ந்த வனம்.
பல பழ மரங்கள் உள்ள அடர்ந்த வனம்.
உயரமான பல பழ மரங்கள் உள்ள அடர்ந்த வனம்.



## பதக்கம்

தங்கப் பதக்கம்.
பளபளப்பான தங்கப் பதக்கம்.
சிறிய பளபளப்பான தங்கப் பதக்கம்.
இரண்டு சிறிய பளபளப்பான தங்கப் பதக்கம்.
என் இரண்டு சிறிய பளபளப்பான தங்கப் பதக்கம்.

www.kanimaths.com

## மரம் நடு விழா

நான் நாவல் மரக்கன்று நட்டேன்.
கயல் மாங்கன்று நட்டாள்.
அன்வர் பலாக்கன்று நட்டான்.
இயல் ஈச்சங்கன்று நட்டாள்.
ஆதவன் ஆலமரக்கன்று நட்டான்.
எல்லாரும் மரக்கன்றுகள் நட்டோம்.
ஆகா, அடர்ந்த வனம் உருவாகுமே!



### வினாக்கள்

1. யார் நட்டது சுளைகள் உள்ள பழம் தரும்? ________________

2. சரியா (✓) தவறா (X) குறியிடுக.
   - தங்கப்பதக்கம் பொலிவில்லாமல் இருந்தது. ☐
   - இயல் ஒரு சிறுவன். ☐
   - நண்பர்கள் சேர்ந்து மரக்கன்றுகளை நட்டனர். ☐

3. எந்த மரக்கன்று வளர்ந்து விழுதுகள் விடும்? ________________



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 7
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:17 PM

www.kanimaths.com

# படித்துப் பழகுதல் – 2

| | | | |
|---|---|---|---|
| மின்/மினி | வாழ்த்/தினர் | நீர்ப்/பா/சனம் | சின்/னஞ்/சிறி/ய |
| கீழ்/வா/னம் | தீர்க்/கமா/ன | வீற்/றிருந்/தார் | கண்/டங்/கத்/திரி |
| நீர்/வீழ்ச்/சி | உடற்/பயிற்/சி | மின்/னஞ்/சல் | மின்/காந்/தங்/கள் |
| சிற்/பங்/கள் | பீர்க்/கங்/காய் | இயந்/திரங்/கள் | மின்/சா/ரக்/கம்/பி |
| திட்/டங்/கள் | மிட்/டாய்/கள் | சிலப்/பதி/கா/ரம் | இலக்/கிய/மன்/றம் |
| வீ/ரிய/மிக்/க | மணற்/சிற்/பம் | நீச்/சல/டித்/தார் | மலர்க்/கண்/காட்/சி |
| மயி/லாட்/டம் | மன்/னராட்/சி | சீ/னக்/களி/மண் | தண்/ணீர்த்/தடா/கம் |

| சொற்பட்டியல் | | | |
|---|---|---|---|
| நற்றமிழ் | அகரமுதலி | நீர்ப்பாசனம் | திட்டமிட்டனர் |
| மின்மினி | காய்கறிகள் | தமிழ்ப்பாடல் | கூட்டுமுயற்சி |
| கற்றீர்கள் | உடற்பயிற்சி | வாழ்த்தினர் | சீனக்களிமண் |
| வீரியமிக்க | மகிழ்மன்றம் | நீலவண்ணம் | சின்னஞ்சிறிய |
| சிற்பங்கள் | மன்னராட்சி | மணற்சிற்பம் | கண்டங்கத்தரி |
| நீர்வீழ்ச்சி | மயிலாட்டம் | நீச்சலடித்தார் | மின்காந்தங்கள் |
| திட்டங்கள் | ஒயிலாட்டம் | இயந்திரங்கள் | இலக்கியமன்றம் |
| தீர்க்கமான | பட்டிமன்றம் | மின்விசிறிகள் | மலர்க்கண்காட்சி |
| பீர்க்கங்காய் | மின்னஞ்சல் | சிலப்பதிகாரம் | தண்ணீர்த்தடாகம் |
| மிட்டாய்கள் | வீற்றிருந்தார் | மின்சாரக்கம்பி | வானவில்மன்றம் |

## நீருடன் தொடர்புடைய சொற்களைக் கண்டுபிடித்து எழுதுக.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 8
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:17 PM

## படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



### மன்றம்

இலக்கிய மன்றம்.
பள்ளி இலக்கிய மன்றம்.
நம் பள்ளி இலக்கிய மன்றம்.
சிறப்பான நம் பள்ளி இலக்கிய மன்றம்.
மிகச் சிறப்பான நம் பள்ளி இலக்கிய மன்றம்.



### பந்தல்

தண்ணீர்ப் பந்தல்.
பயன்படும் தண்ணீர்ப் பந்தல்.
எல்லாருக்கும் பயன்படும் தண்ணீர்ப் பந்தல்.
மக்கள் எல்லாருக்கும் பயன்படும் தண்ணீர்ப் பந்தல்.
ஊர் மக்கள் எல்லாருக்கும் பயன்படும் தண்ணீர்ப் பந்தல்.

### பிறந்தநாள் விழா

ஆகா, மகிழ்ச்சி! ஆகா, மகிழ்ச்சி!
எதற்காக? எதற்காக?
கிளியின் பாடல் எதற்காக?
எதற்காக? எதற்காக?
மயிலின் நடனம் எதற்காக?
எதற்காக? எதற்காக?
சரம்சரமாய் மலர்கள் எதற்காக?
நரியண்ணாவின் பிறந்தநாள்
அதற்காக! அதற்காக!
ஆகா, மகிழ்ச்சி! ஆகா, மகிழ்ச்சி!



### வினாக்கள்

1. தண்ணீர்ப் பந்தல் யாருக்கானது? நிழலிடுக.

   அ) விலங்குகள் ◯  ஆ) பறவைகள் ◯  இ) மனிதர்கள் ◯

2. பிறந்தநாள் விழா எங்கு நடைபெற்றிருக்கும்? ____________

3. யார் எங்கே செல்வர் என்பதைப் பொருத்துக.

| | | |
|---|---|---|
| ஒருவர் நீண்ட தொலைவு நடந்து வந்துள்ளார். | – | பிறந்தநாள் விழா |
| ஒருவர் தான் படித்த புத்தகம் பற்றிப் பேச இருக்கிறார். | – | தண்ணீர்ப்பந்தல் |
| ஒருவர் கையில் பரிசு உள்ளது. | – | இலக்கிய மன்றம் |



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 9
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:17 PM

# படித்துப் பழகுதல் – 3

| | | | |
|---|---|---|---|
| கூ/டா/ரம் | நூ/லகங்/கள் | பல்/லாங்/குழி | இலக்/கண/நூல் |
| தஞ்/சா/வூர் | நூற்/றாண்/டு | விளக்/குத்/திரி | குழிப்/பணி/யா/ரம் |
| முக்/கா/லம் | குண்/டூ/சிகள் | கும்/மிப்/பாட்/டு | சிறு/தா/னியங்/கள் |
| ஊர்ப்/புறம் | கா/விரி/யா/று | புல்/லாங்/குழல் | மூங்/கில்/கா/டுகள் |
| குளி/ரூட்/டி | சூ/ரிய/காந்/தி | தூண்/டில்/ மீன் | வண்/ணத்/துப்/பூச்/சி |
| விருந்/தா/ளி | குறுந்/தக/வல் | எறும்/புப்/புற்/று | தூக்/கணாங்/குரு/வி |
| நூல்/கண்/டு | சிலம்/பாட்/டம் | சிட்/டுக்/குரு/வி | முன்/னும்/பின்/னும் |
| வா/னூர்/திகள் | நூற்/ பட்/டியல் | சுற்/றுலாத்/தலம் | குரு/விக்/கூட்/டங்/கள் |

## சொற்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| ஊர்ப்புறம் | குறுந்தகவல் | சிலம்பாட்டம் | இலக்கணநூல் |
| குளிரூட்டி | நூற்பட்டியல் | எறும்புப்புற்று | மூங்கில்காடுகள் |
| நூலகங்கள் | கும்மிப்பாட்டு | புல்லாங்குழல் | சிறுதானியங்கள் |
| ஏறியிறங்கி | சிட்டுக்குருவி | அங்குமிங்கும் | துண்டுத்தாள்கள் |
| குண்டூசிகள் | தூண்டில்மீன் | புரட்சிக்கவிஞர் | இருசக்கரவாகனம் |
| ஆண்டுவிழா | கூடாரவாயில் | பாடநூல்கழகம் | முன்னும்பின்னும் |
| பல்லாங்குழி | இரவுபகலாக | சுற்றுலாத்தலம் | வண்ணத்துப்பூச்சி |
| மகிழ்முற்றம் | முத்துப்பற்கள் | சிறுபஞ்சமூலம் | தூக்கணாங்குருவி |
| சூரியகாந்திப்பூ | முகநூல்பக்கம் | இருண்டவானம் | குருவிக்கூட்டங்கள் |

## இயற்கையை நினைவுபடுத்தும் சொற்களை எடுத்து எழுதுக.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 10 8/14/2025 6:10:17 PM

www.kanimaths.com

## படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



### பாட்டு

கும்மிப்பாட்டு
இனிமையான கும்மிப்பாட்டு
பாரதியின் இனிமையான கும்மிப்பாட்டு
மகாகவி பாரதியின் இனிமையான கும்மிப்பாட்டு
நம் மகாகவி பாரதியின் இனிமையான கும்மிப்பாட்டு



### பூச்சி

வண்ணத்துப்பூச்சி
அழகான வண்ணத்துப்பூச்சி
அமர்ந்த அழகான வண்ணத்துப்பூச்சி
பூவில் அமர்ந்த அழகான வண்ணத்துப்பூச்சி
பூத்த பூவில் அமர்ந்த அழகான வண்ணத்துப்பூச்சி

### கூடு கட்டினோம்

கட்டினோம் கட்டினோம்
கூடு கட்டினோம்
குருவி குச்சி எடுத்து வந்தது
புறா புல் எடுத்து வந்தது
தூக்கணாங்குருவி நூலை எடுத்து வந்தது
வல்லூறு ஓடு எடுத்து வந்தது
எல்லாரும் சேர்ந்து கூடு கட்டினோம்
அட, என்னே அழகான கூடு!



www.kanimaths.com

### வினாக்கள்

1. மூன்று சொல்லுக்கும் தொடர்புடைய சொல் எது?

   கவிதை, மகாகவி, விடுதலை ______________

   கைதட்டு, பாட்டு, வட்டம் ______________

   தங்குதல், தூங்குதல், பாதுகாப்பு ______________

2. புத்தகம், பறவை ஆகிய பொருள்தரும் சொற்களை எடுத்து எழுதுக.

   ______________________________

3. தன் பெயரின் முதல் எழுத்தில் தொடங்கும் பொருளை எடுத்து வந்தவை எவை?

   ______________________________



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 11 8/14/2025 6:10:18 PM

www.kanimaths.com

## படித்துப் பழகுதல் – 4

| | | | |
|---|---|---|---|
| தென்/றல் | பே/ரிக்/காய் | பெருங்/கா/யம் | வந்/தே/மா/தரம் |
| தேங்/காய் | தேன்/சிட்/டு | நெல்/லிக்/காய் | நேந்/திரம்/பழம் |
| செம்/மண் | பே/சச்/செய் | பே/ரீச்/சம்/பழம் | பெட்/டிச்/செய்/தி |
| வேப்/பம்/பூ | செங்/குள/வி | ஏ/னென்/றால் | சேப்/பங்/கிழங்/கு |
| தேர்ந்/தெடு | கட்/டெறும்/பு | என்/னென்/ன | வெள்/ளரிக்/காய் |
| கேழ்/வர/கு | பார்த்/தெழு/து | ஆங்/காங்/கே | அப்/படி/யெல்/லாம் |
| வெங்/கா/யம் | செங்/காந்/தள் | செம்/பருத்/தி | நெறிப்/படுத்/தினர் |

### சொற்பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| வேப்பம்பூ | தேன்குழல் | நேந்திரம்பழம் | கேழ்வரகுக்கூழ் |
| தேனருவி | மனிதநேயம் | நெல்லிக்கனி | நெறிப்படுத்தினர் |
| பேரிக்காய் | பார்த்தெழுது | வேடந்தாங்கல் | அப்படியெல்லாம் |
| பேசச்செய் | ஆங்காங்கே | சேப்பக்கிழங்கு | பெருங்காயத்தூள் |
| தேன்சிட்டு | ஏனென்றால் | செம்மண்நிலம் | கருமேகக்கூட்டம் |
| தேர்ந்தெடு | செங்காந்தள் | வெள்ளரிக்காய் | பெட்டிச்செய்திகள் |
| செங்குளவி | பேரீச்சம்பழம் | வந்துசேர்ந்தனர் | நெல்லிக்காய்ச்சாறு |
| கட்டெறும்பு | வெட்டுக்கிளி | நெற்களஞ்சியம் | செம்பருத்திப்பூக்கள் |
| நேர்காணல் | நேருக்குநேர் | தென்றல்காற்று | தேங்காயெண்ணெய் |

www.kanimaths.com

### உயிரினங்களின் பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

THIRAN_Tamil_9th_THB_2025 .indd 12 8/14/2025 6:10:18 PM

## படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



### காற்று

தென்றல் காற்று.
இதமான தென்றல் காற்று.
வீசும் இதமான தென்றல் காற்று.
மெல்ல வீசும் இதமான தென்றல் காற்று.
பூங்காவில் மெல்ல வீசும் இதமான தென்றல் காற்று.



### சிட்டு

தேன்சிட்டு
சிறிய தேன்சிட்டு
பறக்கும் சிறிய தேன்சிட்டு
சிறகடித்துப் பறக்கும் சிறிய தேன்சிட்டு
வானில் சிறகடித்துப் பறக்கும் சிறிய தேன்சிட்டு

www.kanimaths.com

## வெயில்

ஒருநாள் நண்பகல் நேரம்
வேணி வெளியே வந்தாள்
கோடை வெயில் சுட்டெரித்தது
பெரிய கிண்ணத்தில் தண்ணீர் ஊற்றினாள்
உள்ளே சென்றாள்
சற்றுநேரத்தில் வீட்டிற்கு வெளியே
கீச்... கீச்..., கீ... கீ..., கா...கா..., கூ...கூ...



### வினாக்கள்

1. தண்ணீர் குடிக்க வந்தவை எவை?

______________________

2. வெப்பம் தரும்; நண்பகலுடன் தொடர்புடையது – அது எது?

______________________

3. இடம்விட்டு இடம் செல்லும்;
கண்களால் பார்க்க முடியாது;
கைகளால் பிடிக்க முடியாது – அது என்ன?

______________________



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 13
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:18 PM

www.kanimaths.com

# படித்துப் பழகுதல் – 5

| | | | |
|---|---|---|---|
| வல/சை | பார்/வை | வை/கா/சி | பனை/மரம் |
| பல/கை | நிறை/ய | உண்/மை | முருங்/கை |
| தை/யல் | மளி/கை | சிறுத்/தை | கற்/றா/ழை |
| பச்/சை | கவி/தை | குழந்/தை | எலு/மிச்/சை |
| அத்/தை | மெத்/தை | தென்/னை | வெற்/றிலை |
| வை/ரம் | கைப்/பை | திண்/ணை | வா/ழைத்/தார் |
| குதி/ரை | அரு/மை | வரை/யா/டு | குடை/மிள/காய் |

| சொற்பட்டியல் | | | |
|---|---|---|---|
| ஒப்படைப்பு | குதிரைப்படை | கலைநயமிக்கது | கதைப்பாடல்கள் |
| ஏறுவரிசை | இசைவிருந்து | பார்வையாளர்கள் | மழைநீர்ச்சேகரிப்பு |
| கையேடுகள் | மளிகைக்கடை | பல்கலைக்கழகம் | பேருந்துநிலையம் |
| மாலைநேரம் | அந்திமந்தாரை | இணைப்புப்பாலம் | குழந்தைகள்தினம் |
| வாழைப்பழம் | குடைமிளகாய் | சிறுத்தைக்குட்டி | வெற்றிலைபாக்கு |
| கூடைப்பந்து | விரிவுரையாளர் | முருங்கைக்கீரை | விளையாட்டரங்கம் |
| வரையாடுகள் | பெயர்ப்பலகை | எலுமிச்சைச்சாறு | உண்மைத்தன்மை |
| பார்வைநேரம் | விசைப்பலகை | வைகாசித்திங்கள் | இளங்கலைப்பட்டம் |
| கல்வித்துறை | கடலைமிட்டாய் | ஒற்றையடிப்பாதை | விவசாயப்பண்ணை |
| கரும்பலகை | சிறுகீரைக்கட்டு | வீட்டுத்திண்ணை | விளையாட்டுவீரர்கள் |

**ஒரே சொல்லில் இரண்டு பெயர்களைக் கொண்டுள்ள சொற்களை எழுதுக.**



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 14 8/14/2025 6:10:19 PM

## படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



**கீரை**

முருங்கைக்கீரை
சத்து மிகுந்த முருங்கைக்கீரை.
நலம் தரும் சத்து மிகுந்த முருங்கைக்கீரை.
உடலுக்கு நலம் தரும் சத்து மிகுந்த முருங்கைக்கீரை.
நமது உடலுக்கு நலம் தரும் சத்து மிகுந்த முருங்கைக்கீரை.



**வீரர்கள்**

விளையாட்டு வீரர்கள்.
இந்திய விளையாட்டு வீரர்கள்.
வென்ற இந்திய விளையாட்டு வீரர்கள்.
பதக்கம் வென்ற இந்திய விளையாட்டு வீரர்கள்.
தங்கப்பதக்கம் வென்ற இந்திய விளையாட்டு வீரர்கள்.

## அட! அழகிய கனவு!



அழகழகான வண்ணங்கள்!
தூரிகையை எடுத்தாள் வாணி.
மீசை வரைந்தாள்: பூனை வந்தது.
வரிகளை வரைந்தாள்: வரிக்குதிரை வந்தது.
புள்ளிகளை வரைந்தாள்: சிறுத்தை வந்தது.
வெள்ளை வண்ணம் தொட்டாள்: அனைத்தும் மறைந்தன!
அட, அழகிய கனவு கண்டேனே என்றாள்.

### வினாக்கள்

1. வாணி எதை வரைந்திருந்தால் முயல் படம் கிடைத்திருக்கும்? ______
2. வால் இருக்கும்; வரி இருக்காது.
   பல் இருக்கும்; புல் தின்னாது.
   வேகம் இருக்கும்; வீட்டில் இருக்காது – அது என்ன? ______
3. முதல் எழுத்தை மாற்றக் கிடைக்கும் சொற்களைப் படித்தவற்றிலிருந்து எடுத்து எழுதுக.

| | |
|---|---|
| தோசை – ______ | நாரை – ______ |
| கோணி – ______ | கலம் – ______ |
| சொத்து – ______ | தந்தது – ______ |
| விரைந்தாள் – ______ | நிறைந்தன – ______ |
| தொடுத்தாள் – ______ | எண்ணங்கள் – ______ |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

THIRAN_Tamil_9th_THB_2025 .indd 15 8/14/2025 6:10:19 PM

## படித்துப் பழகுதல் – 6

| | | | |
|---|---|---|---|
| சோ/று | கா/ணொலி | பொன்/வண்/டு | சோ/லைக்/குயில் |
| தோ/சை | தொலை/வு | வளை/யோ/சை | தொழில்/நுட்/பம் |
| சோம்/பு | பௌர்/ணமி | ஆ/மை/யோ/டு | முழக்/கத்/தொடர் |
| போர்/வை | தொழு/வோம் | தோட்/டக்/கலை | சொற்/களஞ்/சியம் |
| கோட்/டை | கோ/ரைப்/புல் | கோ/லப்/போட்/டி | தண்/ணீர்த்/தொட்/டி |
| மோ/திரம் | குயி/லோ/சை | மா/டித்/தோட்/டம் | பொறி/யியல்/வல்/லுநர் |
| தோ/ரணம் | சோ/ளக்/கதிர் | பஞ்/சுப்/பொதி/கள் | தொலை/தூ/ரக்/கல்/வி |

| சொற்பட்டியல் | | | |
|---|---|---|---|
| வௌவால் | தொடரோட்டம் | விருந்தோம்பல் | முழக்கத்தொடர் |
| பௌர்ணமி | கோலப்போட்டி | தொழில்நுட்பம் | சொற்களஞ்சியம் |
| நோபல்பரிசு | கொடியேற்றம் | பொம்மலாட்டம் | உண்ணாநோன்பு |
| கோரைப்புல் | கூட்டாஞ்சோறு | பஞ்சுப்பொதிகள் | கௌதாரிப்பறவை |
| சோளக்கதிர் | போட்டித்தேர்வு | முழக்கத்தொடர் | சோளப்பணியாரம் |
| ஆமையோடு | தோட்டக்கலை | மௌவல்மலர்கள் | தொலைதூரக்கல்வி |
| பொன்வண்டு | மாடித்தோட்டம் | கண்டுகளித்தோம் | பொறியியல்வல்லுநர் |
| சொற்பலகை | சோலைக்குயில் | சொட்டுநீர்ப்பாசனம் | வெண்கொற்றக்குடை |
| வளையோசை | எதிரொலித்தது | தண்ணீர்த்தொட்டி | வண்ணத்தோரணங்கள் |

**ஒரு நெடில் எழுத்து மட்டும் இடம்பெற்றுள்ள சொற்களை எடுத்து எழுதுக.**



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 16 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:19 PM

## படித்து விடையைக் கண்டுபிடித்து எழுதுக.



**பறவை**

கௌதாரிப் பறவை.

சிறிய கௌதாரிப் பறவை.

கிளையில் சிறிய கௌதாரிப் பறவை.

மரக்கிளையில் சிறிய கௌதாரிப் பறவை.

கொய்யா மரக்கிளையில் சிறிய கௌதாரிப் பறவை.



**வண்டு**

பொன்வண்டு


பறக்கும் பொன்வண்டு.

வேகமாகப் பறக்கும் பொன்வண்டு.

வானத்தில் வேகமாகப் பறக்கும் பொன்வண்டு.

விரிந்த வானத்தில் வேகமாகப் பறக்கும் பொன்வண்டு.

## பீர்க்கங்கொடி



பீர்க்கம் விதை முளைத்தது; செழுமையாக வளர்ந்தது.

அடடா! இலையைத் தின்றன புழுக்கள்.

காயைத் தின்றன வெட்டுக்கிளிகள்;

தண்டைக் கடித்தன பூச்சிகள்; பீர்க்கங்கொடி உதவி தேடியது.

கோழி வந்தது; புழுக்களைக் கொத்தியது.

உண்ணிக் கொக்கு வந்தது; வெட்டுக்கிளிகளைத் தின்றது.

குருவி வந்தது; பூச்சிகளை விழுங்கியது.

அட! பீர்க்கங்கொடி பிழைத்தது. நன்றி சொல்லி வளர்ந்தது.

### வினாக்கள்

1. எந்த வினாவிற்கு மேலுள்ள பகுதியில் விடை இல்லை?
   - கொய்யா மரக்கிளையில் இருந்த விலங்கு எது? ☐
   - நன்றி சொல்லி வளர்ந்தது எது? ☐
2. விடை எழுதுக.
   - பறந்து செல்லும்; பளபளக்கும். அது எது? ____________________
   - பூ பூக்கும்; பழமாகும். அது எது? ____________________
   - கொத்தித் தின்னும்; கொக்கரிக்கும். அது எது? ____________________
3. நிலவன் பார்த்தபோது பீர்க்கங்கொடியில் காய்கள் இல்லை. தண்டுகள் இருந்தன. அப்படியெனில் எது வந்திருக்கும்? எது வந்திருக்காது? ____________________



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 17 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:20 PM

www.kanimaths.com

# 3 அகரவரிசைப்படுத்துதல்

நாள் : 5, 6

## கற்றல் விளைவு

◈ சொற்களை அகரவரிசைப்படுத்தவும் அகராதியில் சொற்பொருள் அறியவும் திறன்பெறுவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்

- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 13இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- படித்துப் பழகுதல் 1 – சொற்பட்டியல் சார்ந்து பின்வருமாறு வினாக்கள்கேட்டு, மாணவர்களைப் படித்து விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

**(எ.கா.)**

- ழ – எழுத்து இடம்பெற்றுள்ள சொற்கள் எவை?
- உயிரெழுத்தில் தொடங்கும் சொற்களைப் படித்துக்காட்டுக.
- வண்ணம் தொடர்புடைய சொற்கள் எவையெவை?
- சோலையை நினைவுபடுத்தும் சொற்களைப் படித்துக்காட்டுக.

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவினருக்கு ஒரு வினா என்ற வகையிலும் இச்செயல்பாட்டினை நிகழ்த்தலாம். அதிகமான சொற்களைப் படித்துக்காட்டும் குழுவினரைப் பாராட்டுங்கள். பிற குழுவினரையும் ஊக்கப்படுத்துங்கள்.

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 வரிசை அறிதல்

- எழுத்துவரிசை அட்டவணையைக் கொண்டு மாணவர்களுக்கு அகர வரிசையை நினைவுபடுத்துங்கள்.
- மாணவர்களை எண்ணிக்கைக்கேற்பக் குழுவாகப் பிரித்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்களுக்குத் தெரிந்த புத்தகங்கள் / கதைகளின் பெயர்களைக் கரும்பலகை / குறிப்பேட்டில் எழுதச்செய்யுங்கள். எழுதியவற்றை அகரவரிசைப்படுத்தி எழுதச் செய்யுங்கள். குழுவில் ஒருவரைப் படித்துக்காட்டச் செய்யுங்கள்.

**(எ.கா.)**

**சொற்கள் :** பாரதியார் பாடல், ஆயிஷா, பொன்னியின் செல்வன், குயில்பாட்டு, தெனாலிராமன் கதைகள், தண்ணீர், உனக்குப் படிக்கத் தெரியாது, கடலும் கிழவனும், ஆறாம் திணை

**அகரவரிசையில் :** ஆயிஷா, ஆறாம்திணை, உனக்குப் படிக்கத் தெரியாது, கடலும் கிழவனும், குயில்பாட்டு, தண்ணீர், தெனாலிராமன் கதைகள், பாரதியார் பாடல், பொன்னியின்செல்வன்

அலகு 3இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ படித்துப் பழகுதல் 1இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

உங்களுக்குப் பிடித்த இடம் / பொருள் சார்ந்து 15 சொற்கள் எழுதி அகரவரிசைப்படுத்துக.

**(எ.கா.)** இடம் – கடற்கரை. பொருள் – தூரிகை



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 18 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:20 PM

# 4 சொல் உருவாக்குதல்

நாள் : 7, 8

## கற்றல் விளைவு

◈ மொழிவிளையாட்டுகளின்வழி சொற்களஞ்சியம் பெறுவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்

- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 17இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- **படித்துப் பழகுதல் 2** – சொற்பட்டியல் சார்ந்து வினாக்களைக்கேட்டு, விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

(எ.கா.)

- நிகழ்வுகள் நடைபெறுவதைச் சுட்டும் சொற்கள் எவை?
- 'மின்' என்னும் சொல் இடம்பெற்றுள்ள சொற்களைப் படித்துக்காட்டுக.
- நாம் பயன்படுத்தும் பொருள்கள் எவை?
- உயிர்மெய் எழுத்தில் முடியும் சொற்களைப் படித்துக்காட்டுக.

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, ஒரு குழுவினருக்கு ஒரு வினா என்ற வகையிலும் இச்செயல்பாட்டினை நிகழ்த்தலாம். அதிகமான சொற்களைப் படித்துக்காட்டும் குழுவினரைப் பாராட்டுங்கள். பிற குழுவினரையும் ஊக்கப்படுத்துங்கள்.

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 சொல்லுக்குள் சொல்

- மாணவர்களை இரண்டு குழுவாகப் பிரித்துக்கொள்ளுங்கள்.

| குறிப்புகள் | சொற்கள் |
|---|---|
| ஒரு சொல்லில் ஓர் எழுத்தை மட்டும் நீக்குதல் | மக்கள், அரும்பு, குட்டை, கோவளம், தாயம், தாக்கம், காவல், வெற்றிலை, பச்சை, கொண்டை |
| ஒரு சொல்லில் ஓர் எழுத்தை மட்டும் சேர்த்தல் | வயல், கோடை, உணவு , கூடு, கதை, நாடு, திணை, நரகம், சிரம், தாயம் |
| ஒரு சொல்லில் ஓர் எழுத்தை மட்டும் மாற்றுதல் | விந்தை, அரும்பு, விருந்து, குயில், பானை, வட்டம், அகல், வாயில், சொல், முற்றம் |

- பட்டியலில் உள்ள சொற்களை ஒவ்வொரு சொல்லாகக் கரும்பலகையில் எழுதி, ஓர் எழுத்தைச் சேர்த்து, ஓர் எழுத்தை நீக்கி, ஓர் எழுத்தை மாற்றிப் புதிய சொற்களைக் கூறச்செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

- எழுத்தை மாற்றும் செயலில் ஒரு சொல்லில் இருந்து எத்தனை சொல் உருவாக்க முடியுமோ அதுவரை உருவாக்கிக் கூறச்செய்யுங்கள்.

(எ.கா.) ஒரு சொல்லில் ஓர் எழுத்தை மட்டும் நீக்குதல் – (மக்கள் – மகள்)

ஓர் எழுத்தை மட்டும் சேர்த்தல் – (வயல் – வளையல்)

ஓர் எழுத்தை மட்டும் மாற்றுதல் – (விந்தை – தந்தை, மந்தை, கந்தை, சந்தை, எந்தை)

அலகு 4இல் உள்ள பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ படித்துப் பழகுதல் 2இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

- ஒரே எழுத்து இரண்டாம் எழுத்தாக அமையுமாறு சொற்களை உருவாக்கி எழுதுக.

(எ.கா.) ழ – பழம், கழகம், பழக்கம், நிழல், கழல், வழக்கம், குழல், முழக்கம், உழவர், ஆழம், தாழம்பூ, வழவழப்பு, வழக்காறு, வழக்குரைஞர், வழங்குதல், வழங்கு, கிழங்கு, பழமொழி, மழலை, பழம்பெருமை

### ஆசிரியருக்காக...

**சொற்பட்டியலை ஆர்வமுடன் படிக்கத் தூண்டுவதற்கான உத்திகள் :**

சொற்பட்டியலை ஆர்வத்துடன் படிக்க வாய்ப்புக் கிடைக்கும்பொழுதெல்லாம் பின்வரும் உத்திகளைப் பயன்படுத்தலாம். ஒவ்வோர் அலகிலும் ஒரு சில வழிமுறைகளைப் பயன்படுத்தலாம்.

- ஒரே மூச்சில் உங்களால் எத்தனை சொற்களைப் படிக்க முடியும்?
- நான் ஒரு சொல்லைப் படித்தால் அதற்கு மேலும் கீழும் உள்ள சொற்களை உங்களால் படித்துக்காட்ட முடியுமா?
- நான் இரண்டு சொற்களைப் படிப்பேன். அதற்கு இடையிலுள்ள சொல்லை/ சொற்களைப் படித்துக்காட்ட முடியுமா?
- சொற்பட்டியலில் இரண்டு பெயர்ச்சொற்கள் மட்டுமே உள்ளன. சரியா?
- எந்தெந்தச் சொற்களை மகிழ்ச்சியாகப் படிக்கலாம்? படித்துக்காட்டுங்களேன்.
- எந்தெந்தச் சொற்களைச் சோகமாகப் படிக்கலாம்? படித்துக்காட்டுங்களேன்.
- ஒரு நிமிடத்தில் எத்தனை சொற்களைப் படிக்க முடியும்? முயற்சி செய்து பாருங்களேன்.
- சொற்பட்டியலில் உள்ள முக்கியமான சொற்களைக் கூறுங்களேன்.
- உங்களுக்குப் பிடித்த சொற்களைப் படித்துக்காட்டுங்களேன்.
- உங்களின் நண்பர்களுக்குப் பிடித்த சொற்களைப் படித்துக்காட்டுங்களேன்.
- சொற்பட்டியலில் உள்ள சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுங்களேன் .

இவைபோன்ற பல்வேறுவகையான உத்திகளைப் பயன்படுத்திச் சொற்பட்டியலை மாணவர்கள் ஆர்வத்துடன் படித்துச் சொற்களஞ்சியத்தை வளர்த்துக்கொள்வதற்கு வழிகாட்டுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 20
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:21 PM

www.kanimaths.com

# 5 பெயர், வினை

நாள் : 9, 10

## கற்றல் விளைவு

◈ நடைமுறை இலக்கணம் (பெயர், வினை) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்

- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 21இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- படித்துப் பழகுதல் 3 – சொற்பட்டியல் சார்ந்து பின்வருமாறு வினாக்கள்கேட்டு, மாணவர்களைப் படித்து விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

(எ.கா.)

- உங்களுக்குப் பிடித்த சொற்கள் எவை?
- எதிர்ச்சொற்களாக உள்ளவற்றைப் படித்துக்காட்டுக.
- நெடில் எழுத்தில் தொடங்கும் சொற்களைக் கண்டுபிடித்துப் படிக்க.
- புத்தகம் என்னும் பொருள்தரும் சொல் இடம்பெற்ற சொற்கள் எவை?

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 பெயர், வினை அறிதல்

- ஐந்து மாணவர்களை அழைத்து, நடத்தல், சிரித்தல், தலையை ஆட்டுதல், கையை நீட்டுதல், அமர்ந்து எழுதுதல், தேநீர் குடித்தல், தொலைக்காட்சி பார்த்தல், புத்தகம் படித்தல், பல் துலக்குதல், தலை வாருதல், பட்டம் விடுதல் – போன்றவற்றில் ஒரு செயலுக்கான செய்கையைச் செய்யக் கூறுங்கள்.
- நீங்கள் தொடங்குங்கள் என்றவுடன் ஐவரும் அவரவர் தேர்ந்தெடுத்த செயலைச் செய்ய வேண்டும். பிற மாணவர்கள் நன்கு உற்றுநோக்க வேண்டும்.
- செயலை ஒரு நிமிடத்திற்குத் தொடர்ந்து செய்து, பிறகு நிறுத்திவிட வேண்டும்.
- யார் யார் என்னென்ன செயல்களைச் செய்கிறார்கள் என்பதை மனத்தில் இருத்திக் கொள்ளுங்கள்.
- மாணவர்கள் செய்த செய்கைகளை விடுபடல் இருக்குமாறு தொடராக அமைத்து எழுதுங்கள். செய்கைகளை உற்றுநோக்கிய பிற மாணவர்களை, விடுபட்ட இடங்களுக்கான விடையைக் கண்டுபிடித்துக் கரும்பலகையில் நிரப்பச் செய்யுங்கள்.

(எ.கா.)

1. கோமதி தலையை ________
2. ________ கையை நீட்டினான்
3. ________ தேநீர் ________
4. ரஹீம் ________ ________
5. ________ ________ ________



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 21 8/14/2025 6:10:21 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

- ஒவ்வொரு தொடர்களில் இடம்பெற்ற செய்கை என்ன? செய்கையைச் செய்தது யார்? என்பன போன்று வினாக்கள் கேட்டு பெயர்ச்சொல், வினைச்சொல்லை அறிமுகம் செய்யுங்கள்.

அலகு 5இல் உள்ள பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ படித்துப் பழகுதல் 3இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

- பெயர்ச்சொல்லில் தொடங்கி வினைச்சொல்லில் முடியும் தொடர்களை எழுதுக.

(எ.கா.) வானவில் ஏழு வண்ணங்களில் காட்சியளித்தது.

**கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க**

**பெயர்ச்சொல்**

- பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

  (எ.கா.) கண்ணன், யாழினி, வாழை
- பெயர்ச்சொல் ஆறுவகைப்படும். அவை பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பன.
- ஒரு பொருளின் பெயரைக் குறிப்பது பொருட்பெயர்.

  (எ.கா.) முட்டை, முயல் , எழிலன்
- இடத்தின் பெயரைக் குறிப்பது இடப்பெயர்.

  (எ.கா.) சென்னை, வகுப்பு, பள்ளி
- காலத்தின் பெயரைக் குறிப்பது காலப்பெயர்.

  (எ.கா.) கோடை, இரவு, பங்குனி
- ஒன்றின் பகுதி / உறுப்பைக் குறிப்பது சினைப்பெயர். (சினை – உறுப்பு)

  (எ.கா.) வாய், இலை, இறகு
- ஒரு பொருளின் நிறம், சுவை, உணர்ச்சி, வடிவம் போன்றவற்றின் பண்புகளைக் குறிப்பது குணப்பெயர்.

  (எ.கா.) வெண்மை, இனிப்பு, வட்டம்
- ஒரு தொழிலின் பெயரைக் குறிப்பது தொழிற்பெயர்.

  (எ.கா.) பாடுதல், சிரித்தல், நீந்துதல்

**வினைச்சொல்**

- ஒரு செயல் அல்லது தொழிலைக் குறிக்கும் சொல் வினைச்சொல்.

  (எ.கா.) ஓடினான், வரைந்தாள், பறந்தன, மேய்ந்தது



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 22 8/14/2025 6:10:21 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# 6 திணை, பால்

நாள் : 11, 12

## கற்றல் விளைவு

- நடைமுறை இலக்கணம் (இருதிணை, ஐம்பால்) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்

- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 25இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- படித்துப் பழகுதல் 4 – சொற்பட்டியல் சார்ந்து பின்வருமாறு வினாக்கள்கேட்டு, மாணவர்களைப் படித்து விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

(எ.கா.)

- உணவுப் பொருள்களின் பெயர்களைப் படித்துக்காட்டுக.
- வினைச்சொற்களைப் படித்துக்காட்டுக.
- மெய்யெழுத்தில் முடியாத சொற்களைக் கண்டுபிடித்துப் படிக்க.
- மரத்திலிருந்து கிடைக்கும் பொருள்கள் எவை?

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 இருதிணை, ஐம்பால் அறிதல்

- மாணவர்களை இரு குழுவாகப் பிரியுங்கள்.
- கீழ்க்காணும் சொற்கள் எழுதப்பட்ட சொல்லட்டைகளைக் கொண்ட பெட்டியை ஒவ்வொரு குழுவினருக்கும் கொடுங்கள்.

**சொற்கள் :** கோழி, சந்தியா, மரங்கள், கூடைகள், எருமை, மாணவர்கள், பெண்கள், ஆண்கள், தபூவும் செல்வியும், ரஹீமும் மலரும், புத்தகம், குழந்தைகள், ஜோசப்பும் அருளும், பெற்றோர், ...

**இருதிணை, ஐம்பால் குறித்துத் தேவையான விளக்கம் அளியுங்கள்.**

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |

- நீங்கள் தொடங்குங்கள் என்றவுடன் பெட்டியில் உள்ள சொற்களை ஒவ்வொன்றாக எடுத்துச் சென்று கரும்பலகையில் உள்ள ஐந்து பால் வகைகள் எழுதப்பட்ட அட்டவணையில் பொருத்தமான தலைப்பின்கீழ் எழுதவேண்டும். முதலில் சரியாக எழுதும் குழுவினரே வெற்றிபெற்றவராவர்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 23
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:21 PM

www.kanimaths.com

- திணை, பால் சார்ந்து ஒவ்வொரு குழுவினரும் எழுதிய சொற்களைக் கூறச்செய்து

அலகு 6க்கான பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ படித்துப் பழகுதல் 4இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

- பாடநூல் / கதைநூலின் ஒரு பக்கத்தில் உள்ள இருதிணை, ஐம்பால் சொற்களை எடுத்து எழுதுக.

## கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

### திணை

- உயர்திணை – மனிதர்களைக் குறிப்பது.
- அஃறிணை – மனிதர் அல்லாதவற்றைக் குறிப்பது.

### பால்

- திணையின் உட்பிரிவே பால் ஆகும். பால் என்ற சொல்லிற்குப் பகுப்பு என்பது பொருள்.

### உயர்திணை

- ஓர் ஆணை மட்டும் குறிப்பது ஆண்பால் எனப்படும்.

  (எ.கா.) மதன், முகிலன், சிறுவன்
- ஒரு பெண்ணை மட்டும் குறிப்பது பெண்பால் எனப்படும்.

  (எ.கா.) மதி, கவிதா, தோழி
- ஒன்றுக்கு மேற்பட்ட மனிதர்களைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

  (எ.கா.) சிறுவர்கள், மக்கள், அவர்கள்

### அஃறிணை

- அஃறிணையில் ஏதேனும் ஒன்றை மட்டும் குறிப்பது ஒன்றன்பால் ஆகும்.

  (எ.கா.) பறவை, குருவி, பந்து, காகம்
- அஃறிணையில் ஒன்றுக்கும் மேற்பட்டவற்றைக் குறிப்பது பலவின்பால் ஆகும்.

  (எ.கா.) பறவைகள், விலங்குகள், நாற்காலிகள்



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 24 8/14/2025 6:10:21 PM

www.kanimaths.com

# 7 எண்

நாள் : 13, 14

## கற்றல் விளைவு

- நடைமுறை இலக்கணம் (ஒருமை, பன்மை) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்

- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 29இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- **படித்துப் பழகுதல் 5** – சொற்பட்டியல் சார்ந்து பின்வருமாறு வினாக்களைக்கேட்டு, மாணவர்களைப் படித்து விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

**(எ.கா.)**

- விளையாட்டு சார்ந்த சொற்களைப் படித்துக்காட்டுக.
- உணவிற்குப் பயன்படும் பொருள்களின் பெயர்கள் எவை?
- இடத்தின் பெயர்கள் எவை? படித்துக்காட்டுக.
- அஃறிணைப் பெயர்கள் எவை?

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 ஒருமை, பன்மையை அறிதல்

- ஒரு பெட்டியில் 1, 2, 3 எண்கள் எழுதப்பட்ட எண்ணட்டைகளைப் போடுங்கள்.
- இன்னொரு பெட்டியில் ஆண், பெண், புல், குழந்தை, பல், கோழி, பூ, முறுக்கு, சொல், ரோஜா, முள், நாள், மரம், ஈ, வாள், கல், யானை போன்ற சொற்கள் எழுதப்பட்ட சொல்லட்டைகளைப் போடுங்கள்.
- சொல்லட்டைப் பெட்டியிலிருந்து ஏதேனும் ஓர் அட்டையையும் எண்ணட்டைப் பெட்டியில் இருந்து ஏதேனும் ஓர் அட்டையையும் எடுத்துக்காட்டுங்கள்.
- மாணவர்கள் இரண்டையும் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

  **சொல் : ரோஜா, எண் 2** எனில் மாணவர்கள் இரண்டு ரோஜாக்கள் எனக் கூறிக்கொண்டே குறிப்பேட்டில் எழுத வேண்டும்.

  **சொல் : மரம், எண் 1** எனில் மாணவர்கள் ஒரு மரம் எனக் கூறிக்கொண்டே குறிப்பேட்டில் எழுத வேண்டும்.

- இவ்வாறு சொல்லட்டைகளையும் எண்ணட்டைகளையும் மாற்றி மாற்றி எடுத்துக்காட்டி மாணவர்களைக் கூறிக்கொண்டே எழுதச் செய்யுங்கள்.
- மாணவர்கள் எழுதியவற்றைக் கூறச்செய்து ஒருமை, பன்மை குறித்து விளக்கமளியுங்கள்.

அலகு 7இல் உள்ள பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 25
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:21 PM

■ படித்துப் பழகுதல் 5இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

- ஒரே தொடரில் ஒருமைச் சொல்லும் அதற்குரிய பன்மைச் சொல்லும் இடம்பெறுமாறு எழுதுக.

(எ.கா.) பழம் தேடிய கிளி, காட்டில் உள்ள கிளிகள் விளையாடுவதைப் பார்த்தது.
நான் வாங்கிய பானையை மற்ற பானைகளுடன் சேர்த்து வைத்தேன்.

**கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க**

**எண்**

- ஒரு பொருளை மட்டும் குறிப்பது **ஒருமை**.
- ஒன்றிற்கும் மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது **பன்மை**.

(எ.கா.)

| | | |
|---|---|---|
| இலை – இலைகள், | கண் – கண்கள், | மலர் – மலர்கள் |
| ஈ – ஈக்கள், | பூ – பூக்கள், | புறா – புறாக்கள் |
| மரம் – மரங்கள், | காகம் – காகங்கள், | நிறம் – நிறங்கள் |
| கல் – கற்கள், | சொல் – சொற்கள், | பல் – பற்கள் |
| முள் – முட்கள், | வாள் – வாட்கள் | |

மேற்கண்ட வகையில் ஒருமைச் சொற்கள், பன்மையாக மாறும் என்பதை விளக்குங்கள்.

**படித்தலுக்கான உத்திகள்:**

மாணவர்கள் ஆர்வத்துடன் படிக்கப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

- ஒரு குறிப்பிட்ட பத்தியைப் படிக்கச் சொல்லும்பொழுது, அப்பத்தியை ஆர்வத்துடன் படிக்கும்வகையில் பத்தி உணர்த்தும் பொருள் தொடர்பான தூண்டலை/ ஆர்வமூட்டலை வழங்கவேண்டும். அப்பத்தியில் தேடிக் கண்டடையும்படியான வினாக்களைக்கேட்டுப் படிக்கச் செய்யலாம்.
- பத்தியில் உங்களுக்குப் பொருள் தெரியாத மூன்று சொற்கள் உள்ளன என்று நினைக்கிறேன். அவை யாவை?
- பத்தியில் உங்களுக்குப் பிடித்த சொற்கள் உள்ளன என்று நினைக்கிறேன். படித்துப் பாருங்களேன்.
- நான் எழுதும் சில சொற்களின் எதிர்ச்சொற்கள் இப்பத்தியில் உள்ளன. கண்டுபிடிக்க முடியுமா?
- இந்தப் பத்தியில் உங்களுக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன்?
- முதல் பத்தியை வருத்தமாகவும் இரண்டாவது பத்தியை மகிழ்ச்சியாகவும் படித்துக் காட்டுங்களேன்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 26 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:22 PM

www.kanimaths.com

# 8 இடம், காலம்

நாள் : 15, 16

### கற்றல் விளைவு

- நடைமுறை இலக்கணம் (மூவிடம், முக்காலம்) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 படித்துக் கண்டுபிடித்தல்


- மாணவர்களைப் பயிற்சி நூல் பக்கம் 33இல் சொற்பட்டியலைப் படிக்கச் செய்யுங்கள்.
- **படித்துப் பழகுதல் 6** – சொற்பட்டியல் சார்ந்து பின்வருமாறு வினாக்கள்கேட்டு, மாணவர்களைப் படித்து விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

**(எ.கா.)**

- நீர் என்னும் சொல் இடம்பெற்றுள்ள சொற்கள் யாவை?
- பன்மையைக் குறிக்கும் சொற்களைப் படித்துக்காட்டுக.
- நீங்கள் ஒரு கதை எழுதினால், எந்தெந்தச் சொற்களைப் பயன்படுத்துவீர்கள்?
- ஒரே மூச்சில் எத்தனை சொற்களைப் படித்துக்காட்ட இயலும்? படித்துக்காட்டுக.

மாணவர்கள் இரு குழுவாகப் பிரிந்து, ஒரு குழுவினர் வினா கேட்க, மற்றொரு குழுவினர் விடையைப் படித்துக் கண்டுபிடிக்கலாம். மாணவர்களுக்கு வினாக்கள் உருவாக்கத் தேவையான வழிகாட்டுதலும் நேரமும் அளியுங்கள்.

## 2 மூவிடம், முக்காலம் அறிதல்




**மூவிடம், முக்காலம் குறித்துத் தேவையான விளக்கம் அளியுங்கள்.**

- படத்தில் உள்ளது போல் நான்கு வட்டங்களை வரையுங்கள்.
- ஓர் அட்டைப்பெட்டியில் நட, செல், வா, படி, பாடு, ஆடு, நடி, வரை, அழு, சிரி, பேசு... போன்ற வேர்ச்சொற்கள் எழுதப்பட்ட சொல்லட்டைகளைப் போடுங்கள்.
- மாணவர்களை முதல் இரண்டு வட்டங்களில் ஒவ்வொருவரும் அடுத்த இரண்டு வட்டங்களில் இருவர் இருவராகவும் நிற்கச் செய்யுங்கள்.
- முதல் வட்டத்தில் உள்ளவரிடம் ஒரு சொல்லட்டையைக் கொடுங்கள். சொல்லட்டையில் உள்ள சொல் 'வா' எனில் முதல் வட்டத்தில் உள்ளவர், இரண்டாவது வட்டத்தில் (எதிர் வட்டம்) உள்ளவரைப் பார்த்து நான் வந்தேன், நான் வருகிறேன், நான் வருவேன் எனத் தன்னைக் குறிப்பிட்டும் எதிரில் முன்னால் உள்ளவரைச் சுட்டிக்காட்டி நீ வந்தாய், நீ வருகிறாய், நீ வருவாய் எனச் சொல்ல வேண்டும்.
- மூன்றாவது வட்டத்தில் உள்ளவர்களைச் சுட்டிக்காட்டி அவர்கள் வந்தார்கள், அவர்கள் வருகிறார்கள், அவர்கள் வருவார்கள் என்றுசொல்ல வேண்டும்.
- அதே சொல்லட்டையைக் கொண்டு 4 வட்டங்களில் உள்ளவர்களும் தங்கள் மற்றும் பிற வட்டத்தில் நிற்பவர்கள் எண்ணிக்கையையும் கணக்கில் கொண்டு சொல்ல வேண்டும்.
- ஒரு சுற்று விளையாடி முடித்த பின், அடுத்த சுற்றில் வட்டத்தில் நிற்பவர்களையும் சொல் அட்டையையும் மாற்றி விளையாடச் செய்ய வேண்டும்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 27
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:22 PM

அலகு 8இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ படித்துப் பழகுதல் 6இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

- பாடநூல்/ செய்தித்தாளின் ஏதேனும் ஒரு பக்கத்தில் உள்ள மூவிடம், முக்காலம் இடம்பெற்றுள்ள தொடர்களை எடுத்து எழுதுக.

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

**இடம்**

இடம் மூன்று வகைப்படும்.

- தன்மை – தன்னைக் குறிப்பது.
- முன்னிலை – முன்னால் இருப்பவரைக் குறிப்பது.
- படர்க்கை – தன்னையும் குறிக்காமல் முன்னால் இருப்பவரையும் குறிக்காமல் மூன்றாவதாக உள்ள பிறரைக் குறிப்பது.

**காலம்**

காலம் மூன்று வகைப்படும்.

- இறந்தகாலம் – நடந்து முடிந்த செயலைக் குறிப்பது.
- நிகழ்காலம் – நடந்து கொண்டிருக்கும் செயலைக் குறிப்பது.
- எதிர்காலம் – நடக்கப்போகும் செயலைக் குறிப்பது.

(எ.கா.) கண்ணன் வந்தான் – கண்ணன் வருகிறான்– கண்ணன் வருவான்.

| மூவிடப்பெயர்கள் – ஒருமையும் பன்மையும் | | | | | |
|---|---|---|---|---|---|
| தன்மை | | முன்னிலை | | படர்க்கை | |
| ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை | ஒருமை | பன்மை |
| நான், யான், என் | நாம், யாம், நாங்கள், எங்கள் | நீ, உன் | நீர், நீங்கள், நீவிர், நீயிர், உங்கள் | அவர், அவன், அவள், அது | அவர்கள், அவை |

### மூவிடப்பெயர்களில் ஒருமை, பன்மை

1. தன்மை ஒருமை – நான் பேசினேன்.
2. தன்மைப் பன்மை – நாங்கள் கடற்கரைக்குச் சென்றோம்.
3. முன்னிலை ஒருமை – நீ என்ன செய்தாய்?
4. முன்னிலைப் பன்மை – நீங்கள் பார்த்தீர்களா?
5. படர்க்கை ஒருமை – அவள் நடனம் ஆடினாள், அது பறந்தது.
6. படர்க்கைப் பன்மை – அவர்கள் பேசினர், அவை நீந்தின.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 28 8/14/2025 6:10:22 PM

# 9 சுட்டு, வினா

நாள் : 17, 18

## கற்றல் விளைவு

- நடைமுறை இலக்கணம் (சுட்டு, வினா) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 41, இணைப்பு – சொற்பட்டியல் 1இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/ விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- சொற்கள் எழுதிய தாளை மாணவர்களுக்குக் காண்பித்த நொடிக்குள் எடுத்துவிடுங்கள். பார்த்த நொடிக்குள் மாணவர்களைப் படித்துக்கூறச் செய்யுங்கள். படிக்க இயலவில்லையெனில் துண்டுத்தாளைக் காண்பிக்கும் நேரத்தை அதிகரிக்கலாம்.
- நீங்கள் காண்பிக்கும் அனைத்துச் சொற்களையும் படித்துக்கூற மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் குழுவாகப் பிரிந்து, முதல் குழுவினர் சொல்லட்டையைக் காண்பித்த நொடிக்குள், இரண்டாம் குழுவினர் படித்துக்காண்பிக்க வேண்டும். அடுத்து இரண்டாம் குழுவினர் சொல்லட்டையைக் காண்பிக்க, முதல் குழுவினர் படிக்கவேண்டும்.
- மாணவர்கள் விரைவாகப் படிக்கவும் சரியாகப் படிக்கவும் இச்செயல்பாடு உதவும்.

## 2 சுட்டு, வினா அறிதல்

**சுட்டு எழுத்துகள், வினா எழுத்துகளை அறிமுகம் செய்யுங்கள்.**

- மேசைமீது இரு அட்டைப்பெட்டிகளை வையுங்கள். முதல் பெட்டியில் சுட்டெழுத்துகளையும் இரண்டாவது பெட்டியில் வினா எழுத்துகளையும் போடுங்கள்.
- மாணவர்களை இரு குழுவாகப் பிரியுங்கள்.
- ஒரு குழுவிலிருந்து ஒருவர் வந்து ஒவ்வொரு பெட்டியிலிருந்தும் ஓர் எழுத்தட்டையை எடுத்துக்கொள்ள வேண்டும்.
- நீங்கள் ஆண்/ பெண்/ பொருள் இச்சொற்களுள் ஏதேனும் ஒன்றைக் கூற வேண்டும்.
- நீங்கள் கூறிய சொல்லுக்கு அவர்கள் எடுத்துள்ள சுட்டு மற்றும் வினா எழுத்துகளுக்கு ஏற்ப வினா வினை உருவாக்கிக் கூறவேண்டும்.

  (எ.கா.)
  - **நீங்கள் கூறிய சொல்** : ஆண்
  - **மாணவர் எடுத்தது** : சுட்டெழுத்து – அ, வினா எழுத்து – எ
  - **குழுவினர் கூறவேண்டிய வினாக்கள்** :
    1. அவன் எங்கே?
    2. அவன் வைத்திருப்பது எது?
    3. அவன் எங்கே சென்றான்? இப்படி ஏதேனும் ஒரு வினாவை எழுப்பவேண்டும்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 29
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:22 PM

www.kanimaths.com

- இரு குழுவினரும் மாற்றி மாற்றி நீங்கள் கூறும் சொற்களுக்கு ஏற்ப அவர்கள் எடுத்த சுட்டு, வினா எழுத்துகளைக் கொண்டு வினா உருவாக்கிக் கூற வேண்டும்.

அலகு 9இல் உள்ள பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 1இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

ஒரே தொடரில் சுட்டு, வினாச் சொற்கள் இடம்பெறுமாறு தொடர்கள் எழுதுக.

(எ.கா.) அந்த ஓவியம் எங்கே கிடைக்கும்?

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

சுட்டு : ஒன்றைச் சுட்டிக்காட்ட வரும் எழுத்துகளுக்குச் சுட்டு எழுத்துகள் என்று பெயர். அ, இ, உ ஆகிய மூன்று எழுத்துகளும் சுட்டு எழுத்துகள் ஆகும். 'உ' என்னும் எழுத்தைத் தற்காலத்தில் சுட்டாகப் பயன்படுத்துவது இல்லை.

(எ.கா.) அவன், இவள், அங்கு, இங்கு, அந்த, இந்த

வினா : வினா என்றால் வினவுதல், கேட்டல் எனப் பொருள்படும். வினாப் பொருளைத் தரும் எழுத்துகள் வினா எழுத்துகளாகும். அவை எ, யா, ஆ, ஓ, ஏ என்பனவாகும்.

(எ.கா.) எவர்?, யார்?, அவனா?, அவளோ?, யானே?

- 'எ', 'யா' ஆகிய இரண்டு எழுத்தும் சொல்லின் முதலில் வந்து வினாப்பொருள் தரும்.

எவன்?–யாவன்? எவள்?–யாவள்? எவர்?–யாவர்? எவை?–யாவை?

- 'ஆ', 'ஓ' ஆகிய இரண்டு எழுத்தும் சொல்லின் இறுதியில் வந்து வினாப்பொருளைத் தரும்.

| ஆ | | ஓ | |
|---|---|---|---|
| அவனா? | வரைந்தானா? | அவனோ? | பெற்றானோ? |
| அவளா? | பாடினாளா? | அவளோ? | எழுதினாளோ? |
| அவரா? | செய்தாரா? | அவரோ? | கேட்டாரோ? |
| அவர்களா? | பேசினார்களா? | அவர்களோ? | நின்றார்களோ? |

- 'ஏ' என்னும் எழுத்து, சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளைத் தரும்.

ஏன்? – யானே? (ஏ) ஏது? – அவனே? (ஏ)

- யார்? – மனிதரைக் குறித்து வினா எழுப்ப உதவும் சொல்.
- எது? – பறவை, விலங்கு, பொருள்கள் போன்றவற்றைக் குறித்து வினா எழுப்ப உதவும் சொல்.
- எத்தனை? – எண்ணிக்கையை அறிந்துகொள்வதற்கு வினா எழுப்ப உதவும் சொல்.
- என்ன? – பொருள்/விளக்கம் அறிந்துகொள்வதற்கு வினா எழுப்ப உதவும் சொல்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 30 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:22 PM

# 10 அடைமொழி

நாள் : 19, 20

## கற்றல் விளைவு

◈ நடைமுறை இலக்கணம் (பெயரடை, வினையடை) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 41, இணைப்பு – சொற்பட்டியல் 2இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- சொற்கள் எழுதிய தாளை மாணவர்களுக்குக் காண்பித்த நொடிக்குள் எடுத்துவிடுங்கள். பார்த்த நொடிக்குள் மாணவர்களைப் படித்துக்கூறச் செய்யுங்கள். படிக்க இயலவில்லையெனில் துண்டுத்தாளைக் காண்பிக்கும் நேரத்தை அதிகரிக்கலாம்.
- நீங்கள் காண்பிக்கும் அனைத்துச் சொற்களையும் படித்துக்கூற மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் குழுவாகப் பிரிந்து, முதல் குழுவினர் சொல்லட்டையைக் காண்பித்த நேரத்திற்குள், இரண்டாம் குழுவினர் படித்துக்காண்பிக்க வேண்டும். அடுத்து இரண்டாம் குழுவினர் சொல்லட்டையைக் காண்பிக்க, முதல் குழுவினர் படிக்கவேண்டும்.
- மாணவர்கள் விரைவாகப் படிக்கவும் சரியாகப் படிக்கவும் இச்செயல்பாடு உதவும்.

## 2 பெயரடை, வினையடை அறிதல்

- கரும்பலகையில் பெயரடைச் சொற்களையும் வினையடைச் சொற்களையும் கலந்து ஒரு கட்டத்தில் எழுத வேண்டும்.
- மற்றொரு கட்டத்தில் பெயர், வினைச் சொற்களைக் கலந்து எழுத வேண்டும்.
- மாணவர்களை முதல் கட்டத்தில் உள்ள ஒரு சொல், இரண்டாவது கட்டத்தில் உள்ள எந்தெந்தச் சொற்களோடு பொருந்தித் தொடர் அமைகிறதோ அத்தனை தொடர்களையும் உருவாக்கிக் குறிப்பேட்டில் எழுதச் செய்ய வேண்டும்.

  (எ.கா.) **முதல் கட்டத்தில் உள்ள சொல் :** அழகான

  - அழகான மரம்
  - அழகான புறா
  - அழகான வீடு
  - ...
- இதைப் போல முதல் கட்டத்தில் உள்ள அனைத்துச் சொற்களுக்கும் எழுத வேண்டும்.
- கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் அதிக தொடர்களைச் சரியாக உருவாக்கி எழுதியவரே வெற்றி பெற்றவர் ஆவர்.
- இறுதியாகப் பெயரடை, வினையடைச் சொற்களுக்கு விளக்கம் கூறுங்கள்.

அலகு 10இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 2இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 31 8/14/2025 6:10:22 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

| ஒரே பெயர்ச்சொல்லுடன் அடைமொழிகளைச் சேர்த்து நீட்டித்து எழுதுக. | ஒரே வினைச்சொல்லுக்குப் பல்வேறு அடைமொழிகளைச் சேர்த்து எழுதுக. |
|---|---|
| (எ.கா.) வண்டி<br>தொடர்வண்டி<br>வண்ணத் தொடர்வண்டி.<br>நீளமான வண்ணத் தொடர்வண்டி.<br>அழகிய நீளமான வண்ணத் தொடர்வண்டி.<br>புதிய அழகிய நீளமான வண்ணத் தொடர்வண்டி. | (எ.கா.) பாடினார்<br>வேகமாகப் பாடினார்.<br>தெளிவாகப் பாடினார்.<br>மெதுவாகப் பாடினார்.<br>அழகாகப் பாடினார்.<br>சரியாகப் பாடினார்.<br>துணிவாகப் பாடினார்.<br>தனியாகப் பாடினார்.<br>தொடர்ச்சியாகப் பாடினார்.<br>பொறுமையாகப் பாடினார்.<br>முழுமையாகப் பாடினார்.<br>குறைவாகப் பாடினார்.<br>சிறப்பாகப் பாடினார்.<br>சுவையாகப் பாடினார்.<br>சுவையாகப் பாடினார்.<br>இனிமையாகப் பாடினார். |

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

#### பெயரடையும் வினையடையும்

**பெயரடை**

- பெயர்ச்சொல்லின் பண்பை உணர்த்தப் பயன்படும் அடை 'பெயரடை' எனப்படும்.

'எப்படிப்பட்ட?' என்ற வினாவுக்கு விடையாக அமையக் கூடிய சொற்களையெல்லாம் பெயரடை எனலாம்.

எடுத்துக்காட்டாக, எப்படிப்பட்ட மனிதர்? என்னும் வினாவிற்கு நல்ல மனிதர் என்பதே விடையாக அமையும். புதிய மனிதர், பெரிய மனிதர், சிறிய மனிதர், பண்பான மனிதர் என்பனவும் விடைகளாக அமையலாம். அவ்வகையில் நல்ல, புதிய, பெரிய, சிறிய, பண்பான போன்றன பெயரடைகள் ஆகும்.

**வினையடை**

- வினைக்கு அடையாக வந்து, வினை நிகழும் முறை, வினை நிகழும் காலம், வினை நிகழும் இடம் போன்றவற்றை உணர்த்தப் பயன்படுகின்ற அடை, 'வினையடை' எனப்படும்.

  (எ.கா.)
  - அடிக்கடி வருகிறான்
  - வேகமாக வருகிறான்
  - நாளைக்கு வருகிறான்
  - மெல்ல வருகிறான்
  - உள்ளே வருகிறான்
  - மீண்டும் வருகிறான்
- மேலே உள்ள தொடர்களில் இடம்பெற்றுள்ள அடிக்கடி, வேகமாக, மெல்ல, உள்ளே, நாளைக்கு, மீண்டும் ஆகிய சொற்கள் வினையடை ஆகும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 32 8/14/2025 6:10:22 PM

www.kanimaths.com

# 11 தொடரமைப்பு

நாள் : 21, 22

## கற்றல் விளைவு

❖ தொடரமைப்பை அறிந்து பேச்சிலும் எழுத்திலும் முறையாகப் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 41, இணைப்பு – சொற்பட்டியல் 3இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/ விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முந்தைய அலகுகளில் பார்த்த நொடியில் படித்தல் செயல்பாட்டினைச் செயல்படுத்தியது போல் செயல்படுத்துங்கள்.

## 2 தொடரமைப்பு அறிதல்

- கரும்பலகையில் மாம்பழம் என்று எழுதுங்கள்.
- நான் ஒவ்வொரு சொல்லாகக் கூறுவேன். அதைக் கரும்பலகையில் உள்ளதுடன் முன்னாலோ பின்னாலோ பொருத்தமாக இணைத்துக் கரும்பலகையில் எழுத வேண்டும் என்று கூறுங்கள்.
- இனிப்பானது, அதிக, பழுத்த, நன்கு, மரத்தில் பறித்த, ஊரில், பெரிய ... போன்ற சொற்களை ஒவ்வொன்றாகக் கூறித் தொடர்களை எழுதச் செய்யுங்கள்.

(எ.கா.)

- மாம்பழம்
- மாம்பழம் இனிப்பானது.
- மாம்பழம் அதிக இனிப்பானது.
- பழுத்த மாம்பழம் அதிக இனிப்பானது.
- நன்கு பழுத்த மாம்பழம் அதிக இனிப்பானது.
- மரத்தில் பறித்த நன்கு பழுத்த மாம்பழம் அதிக இனிப்பானது.
- ஊரில் மரத்தில் பறித்த நன்கு பழுத்த மாம்பழம் அதிக இனிப்பானது.
- ஊரில் மரத்தில் பறித்த நன்கு பழுத்த பெரிய மாம்பழம் அதிக இனிப்பானது.

- இவ்வாறு எத்தனை சொற்களைச் சேர்க்க முடியுமோ அத்தனை சொற்களைக் கூறித் தொடர் அமைக்கலாம்.
- இடையிடையே தொடரின் அமைப்பு குறித்து விளக்குங்கள். இவ்வாறு வெவ்வேறு சொற்களுக்கு உருவாக்கி எழுதச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 33
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:22 PM

www.kanimaths.com

அலகு 11இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 3இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

- கொடுக்கப்பட்டுள்ள சொல் இறுதியில் வருமாறு வளரும் தொடர்கள் எழுதுக.

வளர்ந்தது, தேடினார், மேகம், பார், நீந்தியது

**(எ.கா.)**

வளர்ந்தது

வேகமாக வளர்ந்தது

செடி வேகமாக வளர்ந்தது

சிறிய செடி வேகமாக வளர்ந்தது

தொட்டியில் சிறிய செடி வேகமாக வளர்ந்தது

பெரிய தொட்டியில் சிறிய செடி வேகமாக வளர்ந்தது

வீட்டில் பெரிய தொட்டியில் சிறிய செடி வேகமாக வளர்ந்தது

என் வீட்டில் பெரிய தொட்டியில் சிறிய செடி வேகமாக வளர்ந்தது

**கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க**

- சொற்கள் ஒன்றுடன் ஒன்று பொருள் தரும் முறையில் தொடர்வது தொடர் ஆகும். எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்ற மூன்று உறுப்புகள் இணைந்து தொடர் அமையும்.

  **(எ.கா.)** தென்றல் ஓவியம் வரைந்தாள்.

  - தென்றல் என்பது எழுவாய். ஒரு தொடரில் யார்?, எது?, எவை?, யாவர்? ஆகிய வினாக்களுக்கு விடையாக வருவது எழுவாயாகும். எழுவாய் என்பது பெயர்ச்சொல்.
  - ஓவியம் என்பது செயப்படுபொருள். ஒரு தொடரில், யாரை? எதை? எவற்றை ஆகிய வினாக்களுக்கு விடையாக வருவது செயப்படுபொருளாகும்.
  - வரைந்தாள் என்பது பயனிலை. ஒரு தொடரில் வரும் வினைச்சொல்லே பயனிலை.
- ஒரு தொடரில் எழுவாயும் செயப்படுபொருளும் பெயர்ச்சொல்லாக இருக்கும். பயனிலை, அந்தத் தொடரின் பயன் நிலைத்து இருக்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.
- எழுவாய், செயப்படுபொருள், பயனிலை என்ற வரிசையில் தொடர் அமையும். சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்ற எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 34 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:22 PM

www.kanimaths.com

# 12 இணைப்புச்சொல்

நாள் : 23, 24

## கற்றல் விளைவு

- நடைமுறை இலக்கணம் (இணைப்புச்சொல்) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 41, இணைப்பு – சொற்பட்டியல் 4இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/ விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முந்தைய அலகுகளில் பார்த்த நொடியில் படித்தல் செயல்பாட்டினைச் செயல்படுத்தியது போல் செயல்படுத்துங்கள்.

## 2 இணைப்புச் சொல் அறிதல்

- மாணவர்களை ஐந்து குழுவாகப் பிரியுங்கள்
- இரு தொடர்களை ஐந்து வெவ்வேறு இணைப்புச் சொற்களால் இணைத்து ஐந்து வகைகளில் தொடர்களை எழுதி ஒவ்வொரு குழுவினருக்கும் ஒரு தொடரைக் கொடுங்கள்.

(எ.கா.) மழை பெய்தது. வெள்ளம் ஓடியது.

  - துண்டுத்தாள் 1 : மழை பெய்தது ஏனெனில், வெள்ளம் ஓடியது.
  - துண்டுத்தாள் 2 : மழை பெய்தது அதனால், வெள்ளம் ஓடியது.
  - துண்டுத்தாள் 3 : மழை பெய்தது ஆனால், வெள்ளம் ஓடியது.
  - துண்டுத்தாள் 4 : மழை பெய்தது அப்படியானால், வெள்ளம் ஓடியது.
  - துண்டுத்தாள் 5 : மழை பெய்தது ஏனென்றால், வெள்ளம் ஓடியது.

- ஒவ்வொரு குழுவினரும் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தொடர்கள் சரியாக இணைக்கப்பட்டுள்ளது அல்லது தவறாக இணைக்கப்பட்டுள்ளது என்பதைக் காரண காரியங்களுடன் வாதிட வேண்டும்.
- வாதிடும்போது ஏதேனும் பிழை ஏற்பட்டால் தேவையான விளக்கங்களை அளிக்கலாம்.
- இறுதியில் அனைத்துக் குழுவினரும் இணைந்து சரியான இணைப்புச் சொல்லுடன் இணைக்கப்பட்ட தொடர்களைக் கண்டறிந்து கூற வேண்டும்.
- இதைப்போல் வெவ்வேறு தொடர்களைக் கொடுத்துக் கண்டுபிடிக்கச் செய்யுங்கள்.
- இச்செயல்பாட்டின்வழி, தொடர்களில் இணைப்புச்சொல் பயன்பாட்டினை அறியச் செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 35 8/14/2025 6:10:23 PM

www.kanimaths.com

அலகு 12இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 4இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

- ஒரே தொடரை இணைப்புச் சொல் சேர்த்தும் இணைப்புச் சொல் இல்லாமலும் எழுதுக.

(எ.கா.) கபிலன் நன்றாகக் கவிதை எழுதினான். அதனால் பாராட்டுப் பெற்றான்.
கபிலன் நன்றாகக் கவிதை எழுதிப் பாராட்டுப் பெற்றான்.

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

**இணைப்புச்சொல்**

இணைப்புச்சொல் என்பது இரண்டு சொல்/தொடரை இணைக்கப் பயன்படும். இவை தொடர்களில் கருத்தை மேலும் தெளிவுபடுத்தவும் தொடர்பை ஏற்படுத்தவும் உதவுகின்றன. இணைப்புச்சொற்களைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தலாம்.

- **காலம் காட்டும் இணைப்புச்சொற்கள்:**

அப்பொழுது, இப்பொழுது, முன்பு, பின்பு, பின்னர், உடனே, அதேசமயம்.

(எ.கா.) மழை பெய்து கொண்டிருக்கிறது. இப்பொழுது, வெளியே போக வேண்டாம்.

- **காரணம் காட்டும் இணைப்புச்சொற்கள்:**

ஏனெனில், ஆகையால், ஆதலால், அதனால், ஆகவே, ஏனென்றால்.

(எ.கா.) மழை பெய்தது. அதனால், பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டது.

- **எதிர்ச்சொல் இணைப்புச்சொற்கள்:**

ஆனால், ஆயினும், இருப்பினும், எனினும், இருந்தபோதிலும், மாறாக.

(எ.கா.) வளவன் வேகமாக ஓடினான். ஆனால், பேருந்தைத் தவறவிட்டான்.

- **ஒற்றுமை காட்டும் இணைப்புச்சொற்கள்:**

மேலும், அதுபோல, அதுமட்டுமல்லாமல், இதோடு, அத்துடன்.

(எ.கா.) மதன் நன்றாகப் பாடுவான். மேலும், நடனமும் ஆடுவான்.

- **விருப்பம் அல்லது தெரிவு காட்டும் இணைப்புச்சொற்கள்:**

அல்லது, இல்லையென்றால், அல்லது என்றால்.

(எ.கா.) உனக்குத் தேநீர் வேண்டுமா? அல்லது பழச்சாறு வேண்டுமா?

- **விளைவு காட்டும் இணைப்புச்சொற்கள்:**

ஆக, ஆகவே, ஆதலால், அதனால், எனவே.

(எ.கா.) மதி நன்றாகப் படித்தாள். ஆகவே, நல்ல மதிப்பெண்கள் பெற்றாள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 36 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:23 PM

www.kanimaths.com

# 13 இரட்டைச்சொல்

நாள் : 25, 26

## கற்றல் விளைவு

◈ நடைமுறை இலக்கணம் (இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர்) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 42, இணைப்பு – சொற்பட்டியல் 5இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/ விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முந்தைய அலகுகளில் **பார்த்த நொடியில் படித்தல்** செயல்பாட்டினைச் செயல்படுத்தியது போல் செயல்படுத்துங்கள்.

## 2 இரட்டைச்சொல் அறிதல்

- அடுக்குத்தொடர்களுக்கும் இரட்டைக்கிளவிக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விளக்குங்கள்.
- மாணவர்களை இரு குழுவாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு குழுவினருக்கும் அடுக்குத் தொடர்களும் இரட்டைக்கிளவித் தொடர்களும் எழுதப்பட்ட துண்டுத்தாள்களைச் சம எண்ணிக்கையில் கலந்து கொடுங்கள்.
- நீங்கள் தொடங்குங்கள் என்று கூறியவுடன் அடுக்குத் தொடர்களையும் இரட்டைக்கிளவித் தொடர்களையும் தனித்தனியே பிரித்தெடுக்க வேண்டும்.
- எந்தக் குழுவினர் முதலில் சரியாகப் பிரித்தெடுத்தனரோ அக்குழுவினரே வெற்றிபெற்றவர்.

| அடுக்குத்தொடர்கள் | இரட்டைக்கிளவித் தொடர்கள் |
|---|---|
| ◉ தனித்தனி இருக்கையில் அமர்ந்தனர். | ◉ அவன் கடகடவெனச் செய்தான். |
| ◉ மரத்தைச் சுற்றிச்சுற்றி வந்தது. | ◉ கமகமவென மணம் வந்தது. |
| ◉ மான் துள்ளித்துள்ளி ஓடியது. | ◉ காற்று குளுகுளுவென வீசியது. |
| ◉ தேடித்தேடிக் கண்டுபிடித்தேன். | ◉ அவள் குடுகுடு என ஓடினாள். |
| ◉ சுடச்சுட வடை தின்றேன். | ◉ தண்ணீர் குபுகுபுவென வந்தது. |
| ◉ வருக வருகவென வரவேற்கிறோம். | ◉ தண்ணீர் சலசலவென்று ஓடியது. |

அலகு 13இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 5இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

- பின்வரும் சூழல் சார்ந்து இரட்டைச் சொற்கள் இடம்பெறுமாறு பத்தி எழுதுக.
  - ◉ சாலையில் செல்லும் பேருந்து, இரை தேடிச் சென்ற புறாக்கள்



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 37 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:23 PM

www.kanimaths.com

# 14 இணைமொழி

நாள் : 27, 28

## கற்றல் விளைவு

◈ நடைமுறை இலக்கணம் (நேரிணை, எதிரிணை, செறியிணைச் சொற்கள்) அறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர்.

### 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 42, இணைப்பு – சொற்பட்டியல் 6இல் உள்ள சொற்களைத் துண்டுத்தாள்/விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முந்தைய அலகுகளில் **பார்த்த நொடியில் படித்தல்** செயல்பாட்டினைச் செயல்படுத்தியது போல் செயல்படுத்துங்கள்.

### 2 இணைமொழி அறிதல்

- நேரிணை, எதிரிணை, செறியிணைச் சொற்கள் சிலவற்றைக் கரும்பலகையில் எழுதுங்கள்.
- மாணவர்களை மூன்று அல்லது நான்கு குழுவாகப் பிரியுங்கள்.
- ஒரே பத்தியில் நேரிணை, எதிரிணை, செறியிணைச் சொற்களைப் பயன்படுத்தி எழுதச் செய்ய வேண்டும்.
- கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் பொருத்தமாகவும் சரியாகவும் அதிக பத்திகளை எழுதிய குழுவினரே வெற்றிபெற்றவர்.

| நேரிணைச் சொற்கள் | எதிரிணைச் சொற்கள் | செறியிணைச் சொற்கள் |
|---|---|---|
| சீரும் சிறப்பும் | அல்லும் பகலும் | செக்கச் செவேல் |
| பேரும் புகழும் | உயர்வு தாழ்வு | வெள்ளை வெளேர் |
| ஈடு இணை | உள்ளும் புறமும் | பச்சைப் பசேல் |
| உற்றார் உறவினர் | இருளும் ஒளியும் | நட்ட நடுவில் |
| நோய் நொடி | மேடு பள்ளம் | கன்னங்கரேல் |
| குற்றங் குறை | முன்னும் பின்னும் | |
| வாடி வதங்கி | மேலும் கீழும் | |

அலகு 14இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ சொற்பட்டியல் 6இல் உள்ள சொற்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

**விரைந்து முடித்த மாணவர்களுக்கு...**

நேரிணை, எதிரிணைச் சொற்கள் அமையும் வகையில் பத்தி எழுதுக.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 38 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:23 PM

# 15 மயங்கொலி

நாள் : 29, 30

## கற்றல் விளைவு

- பொருள் வேறுபாடு அறிந்து மயங்கொலி எழுத்துகளையும் சொற்களையும் பயன்படுத்துவர்.

## 1 பார்த்த நொடியில் படித்தல்

- பக்கம் 42, இணைப்பிலுள்ள தொடர்களைத் துண்டுத்தாள் / விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள்.
- முந்தைய அலகுகளில் பார்த்த நொடியில் படித்தல் செயல்பாட்டினைச் செயல்படுத்தியது போல் செயல்படுத்துங்கள்.

## 2 சரியான எழுத்தை அறிதல்

**பின்வரும் தொடர்களில் ஒன்றைக் கரும்பலகையில் எழுதுங்கள்.**

**தொடர்கள்**

1. கொடைக்கானல் ____________ மீது ____________ மேகம் தவழ்ந்தது.
2. காய் ____________ சமைத்த பின், அடுப்பில் ____________ இருந்தது.
3. கொடியில் ____________ வீசிய முல்லைப்பூவைப் பார்க்க என் ____________ துள்ளியது.
4. ____________ நாள் முழுவதும் ____________ கொண்டு போரிட நீண்ட ____________ உடைய குதிரையில் சென்றான்.
5. குறிஞ்சித் ____________ மக்கள் ____________ மாவு செய்வர்.
6. உயர்ந்து வளர்ந்த ____________ ஏறி, தான் ____________ உடையவர் எனப் பரிசு பெற்றார்.

- தொடரில் விடுபட்ட இடங்களில் ஒரே முதலெழுத்தைக் கொண்ட சொற்கள் எவை? எனக்கேட்டு, மாணவர்களைக் கண்டுபிடிக்கச் செய்யுங்கள்.
- கண்டுபிடித்த மாணவரைக் கரும்பலகையில் விடுபட்ட இடங்களில் எழுதச் சொல்லுங்கள்.
- சரியாக எழுதினால் பாராட்டுங்கள். இல்லையெனில் அடுத்த மாணவருக்கு வாய்ப்பளியுங்கள்.
- இவ்வாறு அடுத்தடுத்த தொடர்களுக்கும் செயல்படுத்துங்கள்.
- இறுதியில் மயங்கொலிகள் குறித்தும் பொருள் வேறுபாடு அறிந்து பயன்படுத்துவது குறித்தும் விளக்கம் கூறுங்கள்.

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

### விடைகள்

1. கொடைக்கானல் மலை மீது மழை மேகம் தவழ்ந்தது.
2. காய்கறி சமைத்த பின், அடுப்பில் கரி இருந்தது.
3. கொடியில் மணம் வீசிய முல்லைப்பூவைப் பார்க்க என் மனம் துள்ளியது.
4. வாழ்நாள் முழுவதும் வாள் கொண்டு போரிட நீண்ட வால் உடைய குதிரையில் சென்றான்.
5. குறிஞ்சித்திணை மக்கள் தினைமாவு செய்வர்.
6. உயர்ந்து வளர்ந்த மரம் ஏறி தான் மறம் உடையவர் எனப் பரிசு பெற்றார்.

அலகு 15இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

■ தொடர்ப்பட்டியலில் உள்ள தொடர்களைச் **சொல்லக்கேட்டு** எழுதச்செய்யுங்கள்.

### விரைந்து முடித்த மாணவர்களுக்கு...

- மயங்கொலிச் சொற்களைக் கொண்டு எடுத்துக்காட்டில் உள்ளது போல் தொடர்கள் எழுதுக.

(எ.கா.) மலை உச்சியில் மழை மேகம் படர்ந்திருந்தது.
மலைப் பகுதியில் மழை அதிகமாகப் பெய்தது.


### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

- மயங்கொலிகள் என்பவை உச்சரிப்பில் சிறுவேறுபாடுகளைக் கொண்டவை. கேட்பதற்கு ஒரே மாதிரியாகத் தோன்றக் கூடியவை. ஆனால், சொல்லில் இடம்பெறும்போது பொருள் மாறுபடும். இவற்றைச் சரியாகப் பயன்படுத்தாவிட்டால் பொருள் குழப்பம் ஏற்படும்.
- மயங்கொலி எழுத்துகள் எட்டு உள்ளன. அவை

ண, ந, ன, ல, ள, ழ, ர, ற

| | | |
|---|---|---|
| ண – 'டண்ணகரம்'<br>ந – 'தந்நகரம்'<br>ன – 'றன்னகரம்' | ர – இடையின 'ரகரம்'<br>ற – வல்லின 'றகரம்' | ல – மேல்நோக்கு 'லகரம்' (தொடு லகரம்)<br>ள – பொது 'ளகரம்' (வருடு ளகரம்)<br>ழ – சிறப்பு 'ழகரம்' |

- மயங்கொலி எழுத்துகளை முறையாக ஒலிக்க, கொடுக்கப்பட்ட படத்தின் உதவியோடு ஒலிப்புப்பயிற்சி அளிக்கலாம். எழுத்துகள் மாறும்போது பொருள்வேறுபடும் என்பதைப் பின்வரும் எடுத்துக்காட்டைக்கொண்டு விளக்கலாம்.




(எ.கா.) மணம் – பூக்கள் மணம் வீசும்.
மனம் – மனிதருக்கு நல்ல மனம் வேண்டும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 40 8/14/2025 6:10:23 PM

# இணைப்பு

## சொற்பட்டியல் 1

| | | | |
|---|---|---|---|
| பற்பொடி | தொலைபேசி | மெத்திருக்கை | தண்ணீர்க்குழாய் |
| மாடிப்படி | திரைச்சீலை | சாய்வுநாற்காலி | மூலிகைப்பற்பசை |
| திறன்பேசி | நுழைவாயில் | அரிவாள்மனை | தூய்மையாக்குதல் |
| மின்னம்மி | அடுப்புமேடை | தொட்டிச்செடி | அரவை இயந்திரம் |
| மின்விசிறி | துணிப்பைகள் | பல்துலக்குதல் | வண்ணத்தூண்கள் |
| காலணிகள் | சிறுகிண்ணம் | கண்கண்ணாடி | குளிர்பதனப்பெட்டி |
| அலமாரிகள் | ஒளிப்படங்கள் | அலங்காரஅறை | கையடக்கக்கணினி |
| வடிகட்டுதல் | மண்பானைகள் | தொலைக்காட்சி | எச்சரிக்கைவிளக்கு |

## சொற்பட்டியல் 2

| | | | |
|---|---|---|---|
| கடலாமை | துறைமுகம் | கிளிஞ்சல்கள் | கடற்கரைமணல் |
| நண்டுகள் | பெருங்கடல் | படகோட்டுதல் | கடலோரக்காட்சி |
| மணல்வீடு | சுறா மீன்கள் | மீன்வலைகள் | நீர்மூழ்கிக்கப்பல் |
| தோணிகள் | கடற்பயணம் | அலையோசை | மணற்சிற்பங்கள் |
| கடற்காற்று | கடல்குதிரை | தூண்டில்போடு | தலைமை மாலுமி |
| திமிங்கலம் | கட்டுமரங்கள் | திசைகாட்டிகள் | கடற்கரைச்சாலை |
| நீச்சல்பழகு | கணவாய்மீன் | பனிப்பாறைகள் | நீலவண்ணக்கடல் |
| பேரலைகள் | நட்சத்திரமீன் | பவளப்பாறைகள் | கலங்கரைவிளக்கு |

## சொற்பட்டியல் 3

| | | | |
|---|---|---|---|
| மேசைகள் | குறிப்பேடுகள் | குப்பைத்தொட்டி | பள்ளி ஆண்டுவிழா |
| அழிப்பான் | திறன்பலகை | குழுச்செயல்பாடு | வழிபாட்டுக்கூட்டம் |
| வகுப்பறை | காட்சிக்கூடம் | பள்ளித்தோட்டம் | விளையாட்டுத்திடல் |
| சுற்றுச்சுவர் | கொடிக்கம்பம் | கதைநூற்பட்டியல் | விழிப்புணர்வுப் பேரணி |
| கரும்பலகை | தேசியக்கொடி | வண்ணத்தூரிகை | விளையாட்டுப்பொருள் |
| குடிதண்ணீர் | சுண்ணக்கட்டி | சத்துணவுக்கூடம் | விளையாட்டுப்போட்டி |
| நூலகவாயில் | எழுதுபொருள் | கணினி ஆய்வகம் | உள்ளரங்க விளையாட்டு |
| கலையரங்கம் | ஆண்டறிக்கை | கலந்துரையாடுதல் | கலைத்திருவிழா நிகழ்வு |

## சொற்பட்டியல் 4

| | | | |
|---|---|---|---|
| எங்கெங்கே? | காரணம் என்ன? | எங்கே செல்கிறாய்? | பொருத்தமானது எது? |
| கூறியது யார்? | மாற்றங்கள் ஏன்? | சென்றது எதற்காக? | கோடிட்டுப் பொருத்துக. |
| காரணம் யாது? | உரிய வினா எது? | வருணித்துக் கூறுக. | எங்கெங்கே பார்த்தார்? |
| காரணம் தருக. | பேசியது யார் யார்? | வழித்தடம் எதுவரை? | பொருள்கள் எத்தனை? |
| எவையெவை? | பெயர்கள் யாவை? | கட்டணம் எவ்வளவு? | பார்த்தது என்னென்ன? |
| பரிசு யாருக்கு? | விளக்கம் எதற்கு? | யாருடைய வண்ணம்? | கண்டுபிடித்தது எங்கே? |
| யார்யாரெல்லாம்? | விவரித்து எழுதுக. | நூல்கள் யாருடையது? | எப்பொழுது கிடைக்கும்? |
| படங்கள் எங்கே? | கிடைத்தது எப்படி? | தெரிவுசெய்து நிரப்புக. | உரியவற்றைப் பொருத்துக. |



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 41
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:23 PM

## சொற்பட்டியல் 5

| | | | |
|---|---|---|---|
| கபடி | சுண்டாட்டம் | குண்டெறிதல் | சதுரங்கப்பலகை |
| பூப்பந்து | வளையபந்து | ஓட்டப்பந்தயம் | வளைகோல்பந்து |
| கால்பந்து | வில்வித்தை | தொடரோட்டம் | நீளம் தாண்டுதல் |
| கைப்பந்து | சிலம்பாட்டம் | கண்ணாமூச்சி | தவளையோட்டம் |
| மல்யுத்தம் | கல்லாங்காய் | பாண்டியாட்டம் | துப்பாக்கிசுடுதல் |
| இறகுப்பந்து | வட்டெறிதல் | ஆடுபுலியாட்டம் | கயிறு தாண்டுதல் |
| பல்லாங்குழி | மட்டைப்பந்து | கயிறு இழுத்தல் | உயரம் தாண்டுதல் |

## சொற்பட்டியல் 6

| | | | |
|---|---|---|---|
| தையலகம் | நாடாளுமன்றம் | அருங்காட்சியகம் | கல்வி அலுவலகம் |
| விண்வெளி | மலர்த்தோட்டம் | காத்திருப்பு அறை | அஞ்சலக அதிகாரி |
| கோளரங்கம் | படக்காட்சியகம் | இ–சேவைமையம் | விளையாட்டரங்கம் |
| ஆற்றங்கரை | மருத்துவமனை | பேருந்துநிலையம் | பல்பொருள் அங்காடி |
| திரையரங்கம் | ஊராட்சிமன்றம் | திருமண மண்டபம் | தொழில்நுட்பப்பூங்கா |
| சிறுவர்பூங்கா | தண்ணீர்ப்பந்தல் | சுற்றுலாத்தலங்கள் | தலைமைச் செயலகம் |
| கிளைநூலகம் | பேருந்துநிறுத்தம் | ஆயத்த ஆடையகம் | சிற்றுண்டி உணவகம் |
| பள்ளி வளாகம் | விமான நிலையம் | கதைச்சித்திர அறை | தொடர்வண்டி நிலையம் |

## தொடர்ப்பட்டியல்

மஞ்சள் நிறப் பலாச்சுளைகள்.
அழகிய செங்காந்தள் மலர்கள்.
கடல் நீர் குடிநீராக மாற்றப்படுகிறது.
காய் முற்றினால்தான் பழம் கிடைக்கும்.
தமிழ்நாட்டின் மாநில விலங்கு வரையாடு.
கீரை விதைத்த வயலில் நாரை அமர்ந்தது.
மழைநேரத்தில் சூடான சுக்குநீர் பருகினோம்.
வண்ணத்துப்பூச்சி பூக்களைத் தேடிச்செல்கிறது.
மலைமேல் பெய்த மழையால் மக்கள் மகிழ்ந்தனர்.
வானத்தில் பறவைகள் வட்டமிட்டுப் பறக்கின்றன.
இயற்கை வேளாண்மை செய்தல் அதிகரித்துள்ளது.
கற்றாழையைச் சுற்றி வெற்றிலைக்கொடி படர்ந்தது.
வேந்தன் வீட்டின் அருகில் பலா மரங்கள் இருந்தன.
நெருப்புக்கோழியின் கண்கள் அதன் மூளையைவிடப் பெரியன.
குறிஞ்சிப்பூ பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே மலரும்.
எகிப்திய மக்கள் சிறுத்தைகளைச் செல்ல விலங்காக வளர்த்தனர்.
தென்னை மரத்தில் தொங்கிய தேன்கூட்டில் தேனீக்கள் மொய்த்தன.
கணவாய் மீனுக்கு மூன்று இதயம் இருப்பது வியப்பளிக்கும் உண்மை.
ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் தஞ்சை சரசுவதி மகால் நூலகம்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 42 8/14/2025 6:10:24 PM

www.kanimaths.com

# வகுப்புநிலைத் திறன்கள்

1. அகராதியில் பொருளறிதல் ........ 45

2. பொருளுணர்ந்து படித்தல் ........ 46

3. நிறுத்தக்குறிகள் ........ 48

4. உரையாடல் அமைத்தல் ........ 50

5. படித்து விடையளித்தல் ........ 51

6. வினா உருவாக்குதல் ........ 53

7. வடிவம் மாற்றி எழுதுதல் ........ 54

8. விளம்பரம் உருவாக்குதல் ........ 57

9. கடிதம் எழுதுதல் ........ 59

10. கட்டுரை எழுதுதல் ........ 62

www.kanimaths.com



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

THIRAN_Tamil_9th_THB_2025 .indd 43 8/14/2025 6:10:24 PM

www.kanimaths.com

## வகுப்புநிலைத் திறன்கள்

| வ. எண் | தலைப்பு | நாள் | பாடப்பொருள் | கற்றல் விளைவு |
|---|---|---|---|---|
| 1 | அகராதியில் பொருளறிதல் | 1, 2 | அகரவரிசை அறிதல் | 505, 614. புதிய சொற்களுக்கான பொருள்களை அகராதியில் கண்டறிதல்.<br>714. பார்வை நூல் துணைகொண்டுபாடப்பொருளில் தெளிவுபெறுதல்.<br>813. அகராதியைத் தாமாகவும் பிறர் உதவியுடனும் பயன்படுத்துதல். |
| 2 | பொருளுணர்ந்து படித்தல் | 3, 4 | சேர்த்தும் பிரித்தும் படித்தல் | 612. பல்வேறு வடிவங்களில் (உரையாடல், கதை, கட்டுரை, கவிதை மற்றும் கடிதம் போன்றவை) எழுதப்பட்ட இலக்கியங்களை உரிய ஒலிப்புமுறை, குரல் ஏற்ற இறக்கத்துடன் பொருள்புரிந்து படித்தல். |
| 3 | நிறுத்தக்குறிகள் | 5, 6 | நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல் | 618. பல்வேறு நோக்கங்களுக்காக எழுதும்போது, பொருத்தமான நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துதல்.<br>720. நிறுத்தக்குறிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்திப் படித்தல், எழுதுதல். (ஆண்டுவிழா அழைப்பிதழ், கடிதம், கட்டுரை, உரையாடல், விழிப்புணர்வு வாசகங்கள் போன்றவை) |
| 4 | உரையாடல் அமைத்தல் | 7, 8 | உரையாடல் | 720. சொல், தொடர், மரபுத்தொடர், நிறுத்தக்குறி போன்றவற்றைப் பொருத்தமாகப் பயன்படுத்தி எழுதுதல். (ஆண்டுவிழா அழைப்பிதழ், கடிதம், கட்டுரை, உரையாடல், விழிப்புணர்வு வாசகங்கள் போன்றவை)<br>818. தமது அனுபவங்களைச் சொந்த நடையில் கதை, பாடல், கட்டுரை, கடிதம், உரையாடல் முதலான இலக்கிய வடிவங்களில் எழுதுதல். |
| 5 | படித்து விடையளித்தல் | 9, 10 | பல்வேறுபட்ட பகுதிகளைப் படித்துப் பொருளறிதல் | 709. ஒன்றைப் படித்து முழுமையான பொருளை உணர்ந்து சார்ந்த வினாக்களுக்கு விடையளித்தல்.<br>808. கட்டுரையைப் படித்து அதன் சமூக மதிப்புகள் குறித்துக் கலந்துரையாடுதல், வினாக்கள் எழுப்பி விடை காணுதல். |
| 6 | வினா உருவாக்குதல் | 11, 12 | வினா எழுத்துகள், சொற்கள் | 704. தாங்கள் படித்தவை பற்றிய புரிதலை மேம்படுத்திக்கொள்ள சிந்தித்தல், வினா எழுப்புதல், கலந்துரையாடுதல்.<br>711. படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்தல். ஐயம் தீர, வினாகேட்டு விடை பெறுதல்.<br>803. படித்தவற்றைப் பற்றிச் சிந்தனை செய்து வினாக்கள் எழுப்பிப் புரிதலை மேம்படுத்திக் கொள்ளுதல். |
| 7 | வடிவம் மாற்றி எழுதுதல் | 13, 14 | துண்டறிக்கையைச் செய்தியாக, அறிக்கையாக மாற்றி எழுதுதல் | 604. வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் ஆகியவற்றில் தாம் கேட்ட, பார்த்த, படித்த செய்திகளைத் தங்களின் சொந்த மொழிநடையில் வெளிப்படுத்துதல். (பேச்சு/எழுத்து/சைகை வழி)<br>814. தான் எழுதுவதைப் படிப்பவர் மற்றும் எழுத்தின் நோக்கம் ஆகியவற்றை மனத்தில் கொண்டு பயன் விளைவிக்கும் வகையில் எழுதுதல்.<br>817. குறிப்பிட்ட ஒரு சூழலில் பிறர் பயன்படுத்திய சொற்களைப் பிறிதொரு சூழலில் தமது மொழிநடையில் பயன்படுத்துதல்.<br>(எ.கா.) பள்ளி நிகழ்வுகள், விழாக்களில் கேட்ட சொற்களை அறிக்கையில் பயன்படுத்துதல்.) |
| 8 | விளம்பரம் உருவாக்குதல் | 15, 16 | விளம்பரம் உருவாக்குதல் | |
| 9 | கடிதம் எழுதுதல் | 17,18 | உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம் | 719. தனிப்பட்டஅனுபவங்களைச் சொந்த நடையில் வெளிப்படுத்துதல். (நாட்குறிப்பு, கடிதம், கட்டுரை) |
| 10 | கட்டுரை எழுதுதல் | 19, 20 | கட்டுரை உருவாக்குதல் | 818, 819. தமது அனுபவங்களைச் சொந்த நடையில் கதை, பாடல், கட்டுரை, கடிதம், உரையாடல் முதலான இலக்கிய வடிவங்களில் எழுதுதல். |



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 44 8/14/2025 6:10:24 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# 1 அகராதியில் பொருளறிதல்

நாள் : 1, 2

## கற்றல் விளைவு

◈ சொற்களை அகரவரிசைப்படுத்தவும் அகராதியின் வாயிலாகச் சொற்பொருள் அறியவும் திறன்பெறுவர்.

## 1 சொற்பொருள் அறிதல்

ஒரு சொல்லிற்கான பொருளை அகராதியில் கண்டறிந்து காண்பித்து சொற்பொருள் அறிதலை விளக்குங்கள்.

மாணவர்களை நான்கு குழுவாகப் பிரித்துப் பின்வரும் சொற்களை ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள்.

குழு 1 – கயல், அகிலம், வேந்தன், மதி, கானகம்

குழு 2 – ஏடு, புரவி, ஆழி, நூல், அன்னை

குழு 3 – வையகம், கதிரவன், சந்திரன், குரவை, பழனம்

குழு 4 – பரிதி, புணல், சமுத்திரம், பார், அனல்

சொற்களுக்கான பொருளைக் கையடக்க அகராதியில் கண்டறிந்து ஒவ்வொரு குழுவினராக வகுப்பறையில் படித்துக்காட்டச் செய்யுங்கள்.

## 2 அகராதியில் கண்டறிதல்

மாணவர்கள், ஒரு சொல்லுக்கான பொருளை அகராதியில் கண்டறிந்தவுடன் அப்பொருளை இடத்திற்கேற்ப எவ்வாறு பயன்படுத்த வேண்டுமென அறிந்துகொள்ள பின்வரும் வகையில் வழிகாட்டுங்கள்.

(எ.கா.) குரவை – கடல், ஒருவகை மீன், ஒலி, ஒரு கூத்து

ஆனால், நமக்குச் செய்யுளிலோ, தொடரிலோ கொடுக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு ஏற்பப் பின்வருமாறு பொருள்கொள்ள வேண்டும் என்பதை விளக்குங்கள்.

◈ குரவை ஆடினர்' என்ற சொற்றொடரில், குரவை என்பதற்குக் 'கூத்து' என்று பொருள்.

◈ குரவையைச் சமைத்தான்' என்ற சொற்றொடரில், குரவை என்பதற்கு 'மீன்' என்பது பொருள்.

◈ குரவைக்குச் சென்றான்' என்ற சொற்றொடரில், குரவை என்பது கடலைக் குறிக்கும்.

◈ குரவை கேட்டது' என்ற சொற்றொடரில், குரவை என்பதற்கு 'ஒலி' என்று பொருள்.

அலகு 1இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 45 8/14/2025 6:10:24 PM

www.kanimaths.com

# 2 பொருளுணர்ந்து படித்தல்

நாள் : 3, 4

## கற்றல் விளைவு

◈ உரையாடல், கதை, கட்டுரை போன்ற பல்வேறு வடிவ இலக்கியங்களைப் பொருளுணர்வுக்கு ஏற்பச் சேர்த்தும் பிரித்தும் படிப்பர்.

## 1 சேர்த்தும் பிரித்தும் படித்தல்

சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் படித்துப் பொருள்புரிந்து கொள்வதற்கு ஏற்ப எடுத்துக்காட்டில் உள்ளதைப்போல் தொடர்களை/பத்தியைக் கரும்பலகை/விளக்கத்தாளில் எழுதிக் கொள்ளுங்கள். பின்வருமாறு விளக்கம் அளியுங்கள்.

(எ.கா. 1)

பின்வரும் தொடர்களில் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் படிப்பதற்கேற்பப் பொருள் மாறுபடுகிறது.

1. இன்று / முதல்தோசைக்குச் சர்க்கரை இல்லை
2. இன்றுமுதல் / தோசைக்குச் சர்க்கரை இல்லை

◈ முதல் தொடர், "இன்று/முதல் தோசைக்குச் சர்க்கரை இல்லை" எனில் "இரண்டாம் தோசைக்குச் சர்க்கரை உண்டு" என்னும் பொருளில் அமைகிறது.

◈ இரண்டாவது தொடர், "இன்றுமுதல் / தோசைக்குச் சர்க்கரை இல்லை" எனில் "இன்றிலிருந்து தோசைக்குச் சர்க்கரை இல்லை" என்னும் பொருளில் அமைகிறது.

இவற்றைப் போன்று மாணவர்களைத் தொடர்கள் எழுதச்செய்து சேர்த்தும் பிரித்தும் படிப்பதற்கேற்பப் பொருள் மாறுபடுவதைக் கூறச்செய்யுங்கள்.

(எ.கா. 2)

ஒருவர் தாம் ஈட்டிய பொருளைத் தாமே அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பது பேராசை. தான் ஈட்டிய பொருளைத் தாமும் அனுபவித்து, தேவைப்படுவோருக்கும் கொடுத்து உதவுவது பெருந்தன்மை. பிறருக்குக் கொடுத்து உதவும் நல்லெண்ணத்தை இயற்கை நமக்குக் கொடுத்த ஒரு வாய்ப்பாக எண்ணி மகிழ்வர் சான்றோர். ஆகவே, நாமும் வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் பிறருக்கு உதவுவோம்; அவர்தம் இன்பத்தில் பங்கு பெறுவோம்.

மேற்கண்ட பத்தியை,

ஒருவர் / தாம் ஈட்டிய பொருளைத் / தாமே அனுபவிக்க வேண்டும் / என்று நினைப்பது பேராசை. தான் ஈட்டிய பொருளைத் / தாமும் அனுபவித்து / தேவைப்படுவோருக்கும் கொடுத்து உதவுவது பெருந்தன்மை. பிறருக்குக் கொடுத்து உதவும் நல்லெண்ணத்தை / இயற்கை நமக்குக் கொடுத்த / ஒரு வாய்ப்பாக எண்ணி மகிழ்வர் சான்றோர். ஆகவே, நாமும் / வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் / பிறருக்கு உதவுவோம்; அவர்தம் இன்பத்தில் பங்கு பெறுவோம்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 46 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:24 PM

இவ்வாறு கோடிட்டுப் பிரித்துப் படிக்கும்பொழுது பொருளை எளிமையாக அறிய முடிகிறது அல்லவா?

இங்கு, "ஒருவர், தாம் ஈட்டிய பொருளை" என்பதற்கும்,

"ஒருவர்தாம் ஈட்டிய பொருளை" என்பதற்கும், பொருள் வேறுபாடு உண்டு.

எனவே, தொடர்களில் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் படிப்பதற்கேற்பப் பொருள் மாறுபடுகிறது. ஆகையால், பொருள் உணர்வுக்கேற்பப் படிக்கும் முறையை அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.

## 2 படித்துக் காட்டுதல்

மாணவர்களைக் குழுவாகவும்/ தனியாகவும் பின்வரும் செயல்பாட்டினை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

நூலகப் புத்தகத்திலோ பாடநூல் பகுதியிலோ அவர்களுக்குப் பிடித்த தொடர்கள்/ கதைப்பகுதி/பத்தியைத் தேர்ந்தெடுத்துச் சேர்த்தும் பிரித்தும் பொருளுணர்வுக்கு ஏற்பக் கோடிட்டுப் படித்துக்காட்டச் செய்யுங்கள்.

அலகு 2இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

### கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

**பொருள் விளங்கும்படி சேர்த்துப் படிக்க வேண்டிய இடங்கள்**

**1. பெயரடை, வினையடைகளைச் சேர்த்துப் படிக்க.**

உயரமான வீடு, வேகமாகச் சென்றான்.

**2. நேரிணை, எதிரிணை, செறிவிணைச் சொற்களைச் சேர்த்துப் படிக்க.**

ஈடுஇணையற்ற, உயர்வுதாழ்வின்றி, கன்னங்கரேலென்று.

**3. எண்கள் வரும்பொழுது சேர்த்துப் படிக்க.**

ஓர் ஊர், இரண்டு நண்பர்கள், நான்கு மாணவர்கள்

**இடைவெளிவிட்டுப் படிக்கவேண்டிய இடங்கள்**

**1. விளிவேற்றுமை ஏற்ற சொல்லைத் தனியே படிக்க.**

கண்ணா/ வா. வேலா/ அங்கே போ.

**2. எழுவாயைத் தனியாகவும் அடுத்துவரும் தொடர்களைத் தனியாகவும் படிக்க.**

மன்னன்/ தன் மக்களைப் பார்த்துச் சொன்னார்.

**3. சொற்களுடன் ‹உம்› சேர்ந்து வரும்பொழுது ஒவ்வொரு ‹உம்› சொல்லின்பின்னும் நிறுத்திப் படிக்க.**

அவர் / தேசநலனுக்காகவும் / முன்னேற்றத்துக்காகவும் / மிகவும் பாடுபட்டார்.

**4. பல பொருள்களை அடுக்கிக் கூறும்பொழுது ஒவ்வொரு பொருளின் பின்னும் நிறுத்திப் படிக்க.**

தங்கம் / கொய்யா / மாம்பழம் / அன்னாசி / வாழைப்பழம் / அனைத்தும் வாங்கினாள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 47 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:24 PM

www.kanimaths.com

# 3 நிறுத்தக்குறிகள்

நாள் : 5, 6

## கற்றல் விளைவு

- நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பக் குரல் ஏற்றஇறக்கத்துடன் படிப்பர்; நிறுத்தக்குறிகளை முறையாகப் பயன்படுத்துவர்.

## வேறுபாடு அறிதல்

**நிறுத்தக்குறி இல்லாமல் உள்ள பின்வரும் பத்தியை அப்படியே படித்துக்காட்டுங்கள்.**

இலங்கையில் காணும் நீர்வீழ்ச்சிகள் எல்லாம் பொருத்தமும் அழகும் உடையவை அடிப்பகுதியிலிருந்து அண்ணாந்து பார்க்கலாம் பக்கத்திலுள்ளவர்களோடு பேசி மகிழலாம் பொருத்தமான இடத்தில் முழங்கால் அளவு நீரில் நின்று களிக்கலாம் பனிபோல் குளிர்ச்சியாக உள்ள நீரைக் கையால் அள்ளிப் பருகலாம் எங்கள் பயணத்தில் எவ்வளவு நேரத்தைக் கொள்ளை கொண்டன இந்த அழகிய அருவிகள் ஒரு நொடியில் மனிதனுடைய மனத்தைக் குழந்தையாக்கும் வித்தை இந்த அருவிகளுக்கு அமைந்திருக்கின்றது இவ்வாறு கூறுபவர் யார் தெரியுமா யான் கண்ட இலங்கை என்னும் நூலில் திரு.வி.க அவர்கள்தான்

**பின்வரும் பத்தியை நிறுத்தக்குறிகளுக்கு ஏற்பப் படித்துக்காட்டுங்கள்.**

இலங்கையில் காணும் நீர்வீழ்ச்சிகள் எல்லாம் பொருத்தமும் அழகும் உடையவை. அடிப்பகுதியிலிருந்து அண்ணாந்து பார்க்கலாம்; பக்கத்திலுள்ளவர்களோடு பேசி மகிழலாம்; பொருத்தமான இடத்தில் முழங்கால் அளவு நீரில் நின்று களிக்கலாம்; பனிபோல் குளிர்ச்சியாக உள்ள நீரைக் கையால் அள்ளிப் பருகலாம். எங்கள் பயணத்தில் எவ்வளவு நேரத்தைக் கொள்ளை கொண்டன இந்த அழகிய அருவிகள்! ஒரு நொடியில் மனிதனுடைய மனத்தைக் குழந்தையாக்கும் வித்தை இந்த அருவிகளுக்கு அமைந்திருக்கின்றது. இவ்வாறு கூறுபவர் யார் தெரியுமா? யான் கண்ட இலங்கை என்னும் நூலில் திரு.வி.க அவர்கள்தான்!

- பத்தியை இரண்டு வெவ்வேறு வகைகளில் படித்துக்காட்டியதில் உள்ள வேறுபாடுகள் குறித்து மாணவர்களைக் கூறச் செய்யுங்கள்.
- பத்தியைக் குழப்பமின்றித் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கும் பத்தியின் கருத்து வெளிப்படுத்தும் உணர்ச்சியுடன் கருத்தைப் புரிந்து கொள்வதற்கும் நிறுத்தக்குறிகள் உதவுகின்றன என்று விளக்கம் அளியுங்கள்.

அலகு 3இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 48 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:24 PM

## கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

- பேசும்போது சில சொற்களுக்குப்பின் சிறு காலஇடைவெளி விடுகிறோம்; வேறு சில இடங்களில் சற்றே அதிகக் காலஇடைவெளி தருகிறோம். மேலும், சொற்களையும் தொடர்களையும் தேவையான இடங்களில் ஏற்றஇறக்கத்தோடு ஒலிக்கிறோம். கால இடைவெளி தருதல், நிறுத்துதல், ஏற்றஇறக்கம் தருதல் போன்ற முறைகளால் செய்திப் பரிமாற்றத்தில் குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கிறோம்.
- எழுதும்போது காற்புள்ளி [,], அரைப்புள்ளி [;], முக்காற்புள்ளி [:], முற்றுப்புள்ளி [.], வினாக்குறி [?], உணர்ச்சிக்குறி [!], ஒற்றை மேற்கோள் குறி [‘ ’], இரட்டை மேற்கோள் குறி [“ ”] ஆகியவற்றைப் பயன்படுத்துகிறோம்.

### நிறுத்தக்குறிகள்

| | | |
|---|---|---|
| காற்புள்ளி | , | ஒரு தொடரில் பல பொருள்கள் அடுக்கி வரும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) மா, பலா, வாழை ஆகியவற்றை முக்கனி என்பர். |
| அரைப்புள்ளி | ; | ஓர் எழுவாய், பல பயனிலைகளைப் பெற்று வரும்போது ஒவ்வொரு பயனிலையின் இறுதியிலும் குறிக்கப்படுவது. (எ.கா.) காளையின் கொம்பைப் பிடித்தல் வீரம்; வாலைப் பிடித்தல் வீரமின்மை. |
| முக்காற்புள்ளி | : | ஒரு தொடரின் தொடர்பை உணர்த்தக் குறிக்கப்படுவது. (எ.கா.) முக்கனி : மா, பலா, வாழை |
| முற்றுப்புள்ளி | . | ஒரு தொடர் முடிவு பெற்றதனை உணர்த்துவதற்காகக் குறிக்கப்படுவது. (எ.கா.) எனக்குச் சடுகுடு விளையாடப் பிடிக்கும். |
| வினாக்குறி | ? | ஒரு தொடர் வினாப்பொருளைத் தரும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) அப்பா என்னால் பறக்க முடியாதா? |
| உணர்ச்சிக் குறி | ! | ஒரு தொடர் உணர்ச்சியை வெளிப்படுத்தும்போது குறிக்கப்படுவது. (எ.கா.) என்னே! கங்கை கொண்ட சோழபுரக் கோவிலின் அழகு! |
| ஒற்றை மேற்கோள் குறி | ‘ ’ | ஒரு தொடரில் நூல் பெயர், கட்டுரை பெயர், பழமொழி முதலியன வந்தால் குறிக்கப்படுவது. (எ.கா.) பிரபஞ்சனின் படைப்புகளுள் 'வானம் வசப்படும்' என்னும் நூல் குறிப்பிடத்தக்கது. |
| இரட்டை மேற்கோள் குறி | “ ” | ஒரு தொடரில் ஒருவர் கூறியதை நேர்க்கூற்றாகக் கூறும்போதும் ஒரு தொடரை மேற்கோளாகப் பயன்படுத்தும் போதும் குறிக்கப்படுவது. (எ.கா.) "கண்வனப்பு கண்ணோட்டம்" என்று சிறுபஞ்சமூலம் குறிப்பிடுகிறது. |



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 49 8/14/2025 6:10:25 PM

# 4 உரையாடல் அமைத்தல்

நாள் : 7, 8

## கற்றல் விளைவு

◈ உரையாடலைப் படித்துப் புரிந்துகொள்வர்; உரையாடல் உருவாக்குவர்.

## சூழலுக்கேற்ப உரையாடுதல்

பின்வரும் சூழலை விளக்கத்தாள்/ துண்டுத் தாளில் எழுதிக் கொள்ளுங்கள். மாணவர்களைச் சிறுகுழுவாகப் பிரித்துக் கொள்ளுங்கள். சூழல் எழுதப்பட்ட துண்டுத்தாளை மாணவர்களிடம் கொடுத்துப் பொருத்தமாக உரையாடல் நிகழ்த்திகாட்டச் செய்யுங்கள். உரையாடல் எவ்வாறு அமைய வேண்டுமென வழிகாட்டுங்கள்.

**சூழல் : 1**

பேருந்து நிலையத்தில் நிற்கும் பேருந்தில் அமர்ந்துள்ள முதியவருக்கும் நடத்துநருக்கும் இடையே நடைபெறும் உரையாடல். பேருந்து கிளம்பும் முன்...

**சூழல் : 2**

கோடை விடுமுறை தொடங்க இருக்கின்றது. மூன்று நெருங்கிய நண்பர்களான மாலா, எழில் மற்றும் கவின் ஆகியோர், தங்கள் பள்ளியின் விளையாட்டுத் திடலில் சந்திக்கிறார்கள். அவர்கள் மூவரும் தங்கள் விடுமுறையை எப்படிப் பயனுள்ளதாகக் கழிக்கலாம் என்று பேசுகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒரு திட்டமிடல் இருக்கிறது, ஆனால் ஒன்றாக எதையாவது செய்யவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

**சூழல் : 3**

மனித இனம் மர்மமான முறையில் பூமியில் இருந்து மறைந்து பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஒரு காலத்தில் பரபரப்பாக இயங்கிய நகரங்கள் இப்போது காடுகளாகவும் நீர்நிலைகளாகவும் மாறிவிட்டன. விலங்குகள் தங்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளன. ஆனால், ஒரு வினோதமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. அவை ஒன்றுடன் ஒன்று பேசும் திறனைப் பெற்றுள்ளன. அந்தச் சூழலில் விலங்குகளாக மாறிப் பேசுவோமா?

அலகு 4இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

## கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

உரையாடல் என்பது இருவரிடையே நடைபெறும் செய்திப் பரிமாற்றம் அல்லது கருத்துப்பரிமாற்றம் எனலாம். இது பேச்சு வழியாகவோ எழுத்து வழியாகவோ அமையும். உரையாடல் வழியாக ஒரு கருத்தை அல்லது செய்தியை நீங்கள் தெரிந்து கொள்ளும்பொழுது அது எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றாக அமைகிறது அல்லவா?

எடுத்துக்காட்டாக, வானொலி உரையாடல்கள், நாடக உரையாடல்கள், திரைப்பட உரையாடல்கள், பேட்டிகள், விளம்பரங்கள் போன்றவற்றைக் கூறலாம்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 50 8/14/2025 6:10:25 PM

# 5 படித்து விடையளித்தல்

நாள் : 9, 10

## கற்றல் விளைவு

◈ செய்தித்தாள், அறிவிப்புகள், விளம்பரங்கள், முழக்கத்தொடர்கள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்வர்; வினாக்களுக்கு விடையளிப்பர்.

## படித்து அறியும்முறை

தொடர்களை, பத்தியைப் படித்துப் புரிந்துகொள்ளும் முறையைப் பின்வரும் எடுத்துக்காட்டுகள் வழி விளக்குங்கள்.

(எ.கா. 1) : பின்வரும் தொடர்களைக் கரும்பலகையில் எழுதிக் கொள்ளுங்கள்.

உயிர் நீர் என்று அழைக்கப்படும் மழைநீர் மூலமாக உயிரினங்களுக்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது. மழைநீர் மனிதனுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

நீங்கள் படித்துக்காட்டி/மாணவர்களைப் படிக்கச் செய்து, படித்த பத்தியில் என்னென்ன செய்திகள் இடம்பெற்றுள்ளன? எனக்கேட்டு ஒவ்வொன்றாக மாணவர்களைக் கூறச்செய்யுங்கள்.

◈ மாணவர்கள் கூறும் செய்திகளுடன், ஒரு தொடரை/குறிப்பிட்ட பகுதியைப் படிக்கும்போது எந்தெந்த அடிப்படையில் படிக்க வேண்டும் என்பது குறித்து பின்வரும் குறிப்புகளைக் கொண்டு விளக்கமளியுங்கள்.

**இப்பத்தியானது கருத்து அடிப்படையில்,**

◈ மழைநீர் உயிர்நீருடன் ஒப்பிடப்படுகிறது.

◈ மழைநீரின் பயன்பாட்டைக் கூறுகிறது.

◈ தண்ணீருக்கு ஆதாரம் எதுவெனக் கூறுகிறது.

◈ மழைநீரை எவ்வாறு அழைப்பர் என்பதைக் குறிப்பிடுகிறது.

◈ உயிரினங்கள் என்பதால் மனிதரையும் பிற உயிரினங்களையும் குறிக்கிறது.

◈ உயிரினங்களுக்கான தண்ணீர் எப்படிக் கிடைக்கிறது என்பதை அறியமுடிகிறது.

**இப்பத்தியின் மொழியமைப்பு அடிப்படையில்,**

◈ ஒருமை, பன்மைச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

◈ வேற்றுமை உருபுகள் இடம்பெற்றுள்ளன.

◈ பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இடைச்சொற்கள் உள்ளன.

◈ தொடர்கள் அனைத்தும் நிகழ்காலத்தில் அமைந்துள்ளன.

(எ.கா. 2) : பின்வரும் பத்தியைக் கரும்பலகை விளக்கத்தாளில் எழுதுங்கள்.

### உதவி என்பது...

பிறருக்கு உதவி செய்வது நல்ல பண்பாகும். நண்பர்களுக்கு மட்டுமன்றி, பிறருக்குத் தீங்கு ஏற்படுத்தாத சரியான உதவி யாருக்குத் தேவைப்பட்டாலும் செய்யலாம். ஒருவருக்குத் தேவைப்படும் உதவி பொருளாகவோ பணமாகவோ மட்டும் இருப்பதில்லை. அது ஓர் ஆறுதல் தேவையாகக்கூட இருக்கலாம். நாம் ஒருவருக்கு ஆறுதலாக



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 51 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:25 PM

இருக்கிறோம் என்பதுகூட அவருக்கு நம்பிக்கையைத் தரும். சிலநேரங்களில் துயரைப் பகிர்ந்துகொள்ள ஒருவர் இருந்தால் சிக்கல்களை அவர்களே தீர்த்துக் கொள்வார்கள். பணம், பொருள் போன்ற உதவிகளோடு இதுபோன்ற மனத்தேவைக்கான உதவிகளையும் நாம் செய்ய வேண்டும். யாருக்கு எந்த வகையிலான உதவி தேவைப்படுகிறது என்பதைக் கவனித்து நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

- ஒரு மாணவரை அழைத்துப் பத்தியைப் படித்துக்காட்டச் செய்யுங்கள்.
- பத்தியில் என்னென்ன செய்திகள் இடம்பெற்றுள்ளன என ஒவ்வொன்றாக மாணவர்களைக் கூறச்செய்யுங்கள்.
- **ஒருவருக்கு நாம் ஆறுதலாக இருக்கிறோம் என்பது அவருக்கு எதைத் தரும்?** என்ற வினாவை மாணவர்களிடம் கேட்டு விடை பத்தியில் எங்குள்ளது என்பதைக் கண்டுபிடித்துக் கூறித் தொட்டுக்காட்டச் செய்யுங்கள்.
- **நாம் அவருக்கு ஆறுதலாக இருக்கிறோம் என்பதுகூட அவருக்கு நம்பிக்கையைத் தரும்** என்ற வரியைத் தொட்டுக்காட்டி நம்பிக்கையைத் தரும் என்று மாணவர்கள் கூறுவர். சரி என்றுகூறி, பாராட்டுங்கள்.
- **பிறர் கேட்கும் எந்த உதவிகளை நாம் செய்யத் தேவையில்லை எனப் பத்தி குறிப்பிடுகிறது?** என்ற வினாவை மாணவர்களிடம் கேட்டு விடை பத்தியில் எங்குள்ளது என்பதைக் கண்டுபிடித்துக் கூறித் தொட்டுக்காட்டச் செய்யுங்கள்.
- மாணவர்களிடம் இருந்து சரியாகவோ தவறாகவோ பல்வேறு விடைகள் வரலாம்.
- சில வினாக்கள் நேரிடையாக விடை அளிக்கும்படி இருக்கும். சில வினாக்கள் பத்தியைப் படித்துப் பொருள்புரிந்தால் மட்டுமே விடை அளிக்கும்படி இருக்கும் என்று கூறுங்கள்.
- **நண்பர்களுக்கு மட்டுமன்றி மற்றவர்களுக்குத் தீங்கு ஏற்படுத்தாத சரியான உதவி யாருக்குத் தேவைப்பட்டாலும் செய்யலாம்** – இவ்வரியில் மற்றவருக்குத் தீங்கு ஏற்படுத்தும் சரியல்லாத உதவிகளைச் செய்யக்கூடாது என்ற பொருள் மறைந்துள்ளது என்று கூறுங்கள்.
- **யாருக்கு எந்த வகையிலான உதவி தேவைப்படுகிறது என்பதைக் கவனித்து நம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்** என்ற வரியில் நம்மால் இயலாத உதவிகளைச் செய்யத் தேவையில்லை என்ற பொருள் மறைந்துள்ளது என்று கூறுங்கள்.

இதைப்போல கீழ்க்காணும் வினாக்களைக் கேட்டு நேரிடையாகவோ மறைமுகமாகவோ உள்ள விடைகளைக் கூறச்செய்யுங்கள்.

**பத்தியின் கருத்திலிருந்து சரியா? தவறா? எனக் கூறுக.**

1. பிறருக்கு உதவி செய்ய வேண்டும்.
2. யாருக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் செய்ய வேண்டும்.
3. நண்பர்களைத் தவிர மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.
4. ஒருவருக்குப் பண உதவி செய்யக்கூடாது.

**விடைகள் :** 1 – சரி, 2 – தவறு, 3 – தவறு, 4 – தவறு

அலகு 5இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 52 8/14/2025 6:10:25 PM

www.kanimaths.com

# 6 வினா உருவாக்குதல்

நாள் : 11, 12

## கற்றல் விளைவு

◈ படித்தவற்றைப் பற்றிச் சிந்தித்து வினா உருவாக்குவர்; விடையளிப்பர்.

## கதைகேட்டு வினாகேட்டல்

### சிறுவனும் நாய்க்குட்டியும்

சிறுவன் நாய்க்குட்டி வாங்க, விலங்குகளை விற்பனை செய்யும் கடைக்குச் சென்றான். விற்பனையாளர் நான்கு நாய்க்குட்டிகளைக் காண்பித்தார். அவற்றின் விலை தலைக்கு 100 ரூபாய் என்றார். அந்தச் சிறுவன் அங்கிருந்த மற்றொரு நாய்க்குட்டியைக் காண்பித்து, அதுவும் விற்பனைக்கு உள்ளதா? என்று கேட்டான். அந்தக் கடை முதலாளி அது மாற்றுத்திறன் உடையது, விற்பனைக்கு உரியது அல்ல என்று பதிலளித்தார்.

அந்தச் சிறுவன் அது எத்தகு மாற்றுத்திறன் என்று கேட்டான். அந்தக் கடை முதலாளி அது பிறக்கும்போதே ஓர் இடுப்பு மூட்டும் ஒரு காலும் இல்லாமல் பிறந்தது என்று பதில் சொன்னார். அந்தச் சிறுவன் அந்த நாய்க்குட்டியுடன் விளையாடலாமா என்று கேட்டான். கடை முதலாளி அனுமதி கொடுத்தார். அதனுடன் விளையாடினான். நாய்க்குட்டியும் அவனது கால்களையே சுற்றிச்சுற்றி வந்தது.

உடனே அச்சிறுவன் தான் வாங்க வேண்டிய நாய்க்குட்டி அதுதான் என்று முடிவெடுத்தான். சிறுவன் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதால், கடை முதலாளி அதை விற்க ஒப்புக் கொண்டார். "இதே விலைக்கு நல்லதொரு நாய்க்குட்டியை வாங்க முடியும்போது எதற்காக நீ இதை வாங்குகிறாய் என்று எனக்குப் புரியவில்லை?" என்றார் அந்தக் கடைக்காரர்.

அந்தச் சிறுவன் ஒரு வார்த்தையும் சொல்லாமல் தனது இடது கால்சட்டையைத் தூக்கினான். அங்கே அவன் ஓர் இணைக் கம்பியை அணிந்திருந்தான். அதைப் பார்த்ததும் கடை முதலாளி "நான் இப்போது புரிந்து கொண்டேன், உனது தேர்வு மிகவும் சரியே! இதையே வாங்கிக் கொள்" என்று சொன்னார். 'பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தலில் நீ உயர்ந்து நிற்கிறாய்' என்று கடைக்காரர் சிறுவனைப் பாராட்டி வழியனுப்பினார்.

◈ மேலுள்ள கதையைத் தெளிவாகக் குரல் ஏற்றஇறக்கத்துடன் படித்துக்காட்டுங்கள்.

◈ கதை நிகழ்வுகளுக்கு ஏற்ப மாணவர்களை **ஏன்** என்ற வினாச்சொல் அமைந்த வினாக்களைக் கேட்கத்தூண்டுங்கள்.பின்வரும் வினாக்களை எடுத்துக்காட்டாகக் கூறுங்கள்.

**(எ.கா.)** : சிறுவன் **ஏன்** கடைக்குச் சென்றான்?
நாய்க்குட்டி **ஏன்** சிறுவனையே சுற்றி வந்தது?
ஒரு நாய்க்குட்டியைக் கடைக்காரர் **ஏன்** விற்கமாட்டேன் என்று கூறினார்?

◈ **எதற்கு, எப்படி, எது, யார், எங்கே** போன்ற வினாச்சொற்களை ஒவ்வொன்றாகக் கூறி, அந்த வினாச்சொல் வரும்படி வினாக்கள் கேட்கத் தூண்டுங்கள்.

அலகு 6இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 53
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:25 PM

www.kanimaths.com

# 7 வடிவம் மாற்றி எழுதுதல்

நாள் : 13, 14

## கற்றல் விளைவு

- செய்தித்தாள், அறிவிப்புகள், விளம்பரங்கள், முழக்கத்தொடர்கள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொள்வர்; வேறொரு இலக்கிய வடிவில் மாற்றிப் பேச்சாகவும் எழுத்தாகவும் வெளிப்படுத்துவர்.

## வடிவம் மாற்றி எழுதுதல்

கீழ்க்காணும் துண்டறிக்கையைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

### துண்டறிக்கை

**விளையாட்டுப் போட்டி நிகழ்வு**

**நாள் :** 06.08.2025 **இடம் :** பள்ளி விளையாட்டுத் திடல்

**நேரம் :** காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை

**விளையாட்டுகள் :** ஓட்டப் பந்தயம் (100 மீ., 200 மீ., 400 மீ.)





- கபடி
- பூப்பந்து
- கால்பந்து
- சதுரங்கம்
- குண்டு எறிதல்

**சிறப்பு விருந்தினர் :** மாவட்டக் கல்வி அலுவலர்

**விளையாட்டில் பங்கேற்போர் :** 6 முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள்

**பரிசு, சான்றிதழ் வழங்கும் நேரம் :** மாலை 5 மணி



**அலைகடல் என அனைவரும் திரண்டு வாரீர்!**

தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மைக் குழுவினர்.



www.kanimaths.com

- **துண்டறிக்கை என்பது** ஒரு நிகழ்வு, செயல்பாடு, அனுபவம் அல்லது நடந்த நிகழ்ச்சியைச் சுருக்கமாக, முக்கியமான தகவல்களுடன் தெளிவாக விளக்கும் குறுகிய அறிக்கை ஆகும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- இது பள்ளியில் நடைபெற உள்ள விளையாட்டுப் போட்டியின் துண்டறிக்கை.
- இந்தத் துண்டறிக்கையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் இதை நாளிதழ்/ வானொலி/ தொலைக்காட்சிக்கு அளிப்பதற்குச் செய்தி ஒன்றை உருவாக்கலாம்.

### செய்தியின் கூறுகள்

**தலைப்பு :** ஈர்க்கும் வகையில் இருக்க வேண்டும்.

**அறிமுகம் :** எது? யார்? எப்படி? எப்போது? போன்ற வினாக்களுக்கு விடையளிக்கும் வகையில் அறிமுக வரிகள் இருக்க வேண்டும்.

**முக்கிய நிகழ்வுகளின் விவரம் :** நடைபெறும் நிகழ்வுகள், சிறப்பு விருந்தினர், பங்கேற்பாளர் போன்ற விவரங்கள் இருக்க வேண்டும்.

**முடிவு :** நிகழ்ச்சி குறித்த கருத்து

**செய்தியாளர் பெயர் :** செய்தியைத் தருபவர் விவரம்



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 54 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:27 PM

◈ கரும்பலகையில் உள்ள துண்டறிக்கையின் தகவல்களையும் மேற்கண்ட வழிகாட்டுதலையும் கொண்டு மாணவர்களைச் செய்தியாக உருவாக்கச் செய்யுங்கள்.

(எ.கா.)

### செய்தி

## அரசுப் பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள்!

ஆண்டுதோறும் திண்டுக்கல், அரசு மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இந்த ஆண்டு 06. 08. 2025 அன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை திண்டுக்கல், மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன.

ஓட்டப் பந்தயம் (100 மீ. , 200 மீ. , 400 மீ.), கபடி, பூப்பந்து, கால்பந்து, சதுரங்கம், குண்டு எறிதல் ஆகிய போட்டிகள் நடைபெறும். சிறப்பு விருந்தினராக மாவட்டக் கல்வி அலுவலர் கலந்துகொள்ள உள்ளார். 6 முதல் 12ஆம் வகுப்பு வரை உள்ள மாணவர்கள்போட்டியில் பங்கேற்க உள்ளனர். நிகழ்வுக்கு வருகைதர ஊர்ப்



பொதுமக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற நிகழ்வுகள் மாநில அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்குத் தங்களை ஊக்கப்படுத்துவதாக அமையும் என மாணவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

◈ **அறிக்கை என்பது** நடந்த ஒரு நிகழ்வின் தகவல்களை முறையான கட்டமைப்பில், நிகழ்வை நேரில் பார்த்த அனுபவம் ஏற்படும் வகையில் விளக்கி எழுதப்பட்ட ஆவணமாகும்.

### அறிக்கையின் கூறுகள்

**தலைப்பு :** அறிக்கையின் பொருளைக் குறிக்கும் வகையில் அமைதல்

(எ.கா.) விளையாட்டுப் போட்டி அறிக்கை

**அறிமுகம் :** தேதி, இடம், நேரம் நிகழ்வு எப்போது, எங்கே நடந்தது என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுதல்.

**நிகழ்வின் தொகுப்பு :** நிகழ்வின் தொடக்கம் முதல் முடிவு வரை நடந்தவற்றை வரிசைப்படுத்திப் பதிவுசெய்தல்.

**பங்கேற்பாளர்கள் :** யார் யார் கலந்து கொண்டனர், அவர்களின் பங்களிப்பு என்ன என்பதைக் கூறுதல்.

**முடிவுரை :** நிகழ்வின் தாக்கம், பயன், எதிர்வினை போன்றவற்றைச் சுருக்கமாகக் கூறுதல்.

◈ அதே துண்டறிக்கையில் உள்ள தகவல்களைக் கொண்டு நிகழ்வு நடந்து முடிந்த பின்னர், அறிக்கையாக எவ்வாறு தயாரிக்கலாம் என்று கீழ்க்காணும் அறிக்கையைப் படித்துக்காட்டி விளக்குங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 55 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:27 PM

அறிக்கை

# ஆண்டு விளையாட்டுப் போட்டிகள்

**பள்ளி :** அரசு மேல்நிலைப் பள்ளி

**நாள் :** 06-08-2025

**இடம் :** பள்ளி விளையாட்டு மைதானம்

**தயாரித்தவர் :** உடற்கல்வி ஆசிரியர்



திண்டுக்கல் அரசு மேல்நிலைப் பள்ளியில் ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். இந்த ஆண்டு 06-08-2025 அன்று பள்ளி விளையாட்டுத் திடலில் போட்டிகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன.

நிகழ்வு, காலை 9.00 மணிக்குத் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, பள்ளியின் தலைமையாசிரியர் அவர்கள் தேசியக் கொடியை ஏற்றியபின், மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் உரையாற்றினார். ஆசிரியர்களும் பள்ளி மேலாண்மைக் குழுவினரும் வாழ்த்துரை வழங்கினர். பின்னர் போட்டிகள் தொடங்கின.

**மாணவர்கள் பங்கேற்ற போட்டிகள்:**

ஓட்டப் பந்தயம் (100 மீ. , 200 மீ. , 400 மீ.), கபடி, பூப்பந்து, கால்பந்து, சதுரங்கம், குண்டு எறிதல்.

மாணவர்கள் முழுமையான உற்சாகத்துடன் பங்கேற்றுத் தங்களின் உடல் திறன், ஒத்துழைப்பு, போட்டித் தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தினர். அனைத்துப் போட்டிகளும் சரியான நேரத்திலும் முறையாகவும் நடத்தப்பட்டன. திட்டமிட்டபடி மாலை 4 மணிக்கு அனைத்துப் போட்டிகளும் நடந்து முடிந்தன. மாலை 5 மணிக்கு மாவட்டக் கல்வி அலுவலர் சிறப்புரையாற்றி, போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார். உடற்கல்வி ஆசிரியரின் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

நிகழ்வுகள் நடைபெற ஆசிரியர்கள் அனைவரும் சிறப்பாகச் செயல்பட்டனர். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தங்கள் ஒத்துழைப்பை வழங்கினர். பெற்றோர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

இவ்வாண்டு விளையாட்டுப் போட்டிகள் அனைவரின் ஒத்துழைப்போடு சிறப்பாக நடைபெற்றது. மாணவர்களின் உடல்திறன் வளர்ச்சிக்கும், ஒருங்கிணைந்த மனப்பான்மை உருவாக்கத்திற்கும் இந்நிகழ்வு உதவிகரமாக அமைந்தது.

அலகு 7இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 56 8/14/2025 6:10:27 PM
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

www.kanimaths.com

# 8 விளம்பரம் உருவாக்குதல்

நாள் : 15, 16

## கற்றல் விளைவு

- ❖ கேட்டும் படித்தும் அறிந்த செய்திகளைத் தம் மொழிநடையில் அறிக்கையாக உருவாக்குவர்.

## விளம்பரம் உருவாக்குதல்

விளம்பரம் உருவாக்குதல் மாணவர்களிடம் பின்வரும் வினாக்களைக் கேளுங்கள்.

- ❖ விளம்பரம் எதற்காகச் செய்யப்படுகிறது?
- ❖ விளம்பரத்தில் என்னவெல்லாம் இடம்பெறும்?
- ❖ விளம்பரம் எப்படி இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

மாணவர்கள் கூறும் கருத்துகளைத் தொகுத்துக் கொள்ளுங்கள். அவற்றை முறைப்படுத்திப் பின்வரும் வழிகாட்டுதலை வழங்குங்கள்.

**பெயர்** : விளம்பரத்தின் பொருள்/ கடையின் பெயர் தெளிவாக இருக்க வேண்டும்.

**(எ.கா.) :**







**தலைப்பு** : பொருத்தமான கருத்தைக் கவரும் வகையிலான தலைப்பு இருக்க வேண்டும்.

**(எ.கா.) :**












THIRAN_Tamil_9th_THB_2025 .indd 57
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:29 PM

www.kanimaths.com

**சிறப்புக் கூறுகள் :**

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஒரே இடத்தில் வாங்கலாம்.

- நீண்ட காலம் பயன்படுத்தலாம்.
- உறுதித் தன்மை.
- இயற்கை முறையில் விளைவித்தது.
- பல்வேறு வகைகள்.

**பயன்கள்**

- குறைவான விலையில் நிறைவான சேவை.
- தேர்ந்தெடுக்க விதவிதமான வகைகள்
- சுற்றுச்சூழலுக்கு உகந்தவை.
- வெயில் மழை எல்லாக் காலத்திற்கும் ஏற்றவை.

**படங்கள் :** கருத்தையும் கண்ணையும் கவரும் படங்கள் கொடுக்கப்பட வேண்டும்.

**முகவரி :** தெளிவான முகவரி, வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட வேண்டும்.

**நேரம் / காலம் :**  

தெளிவாகத் தெரியும் வகையில் நாள், கிழமை, நேரம் போன்றவை இடம்பெற வேண்டும்.

**தொடர்பு எண் :** தொடர்பு எண்கள் கொடுக்கப்பட வேண்டும்.

**பக்க வரையறை :** ஒரு பக்கம்/ 2 பக்கம் போன்றவற்றை வரையறுத்துக் கொள்ள வேண்டும்.

- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து மேற்கூறிய கூறுகளை அடிப்படையாகக் கொண்டு விளம்பரம் உருவாக்கச் செய்யுங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் உருவாக்கிய விளம்பரத்தைப் படித்துக் காட்டச் செய்யுங்கள்.
- ஆசிரியர் மாதிரி விளம்பரம் ஒன்றை எழுதிக் காட்டலாம்.

அலகு 8இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 58 8/14/2025 6:10:29 PM

# 9 கடிதம் எழுதுதல்

நாள் : 17, 18

## கற்றல் விளைவு

◈ தேவை, தலைப்பின் அடிப்படையில் கடிதம், கட்டுரைகளை எழுதுவர்.

பின்வரும் கடிதங்களைப் படித்துக் காண்பித்து உறவுமுறைக் கடிதம், அலுவலகக் கடிதம் எழுதும் வழிமுறை குறித்து விளக்கம் அளியுங்கள்.

### உறவுமுறைக் கடிதம்

'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்திக் கடிதம் எழுதுக.

20. 10. 2025 கம்பர் தெரு,

சென்னை –79.

அன்புள்ள தோழா,

நலம். நலமறிய ஆவல். 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் நீ முதல் பரிசு பெற்றதை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். இயற்கையின் மீது நீ, எவ்வளவு ஆர்வம் கொண்டவன் என்பது எனக்குத் தெரியும். மரங்களை வளர்ப்பதிலும் அவற்றைப் பேணிப் பாதுகாப்பதிலும் உனக்குள்ள அக்கறையைக் கண்டு உன்னை எல்லாரும் பாராட்டுகின்றனர். இதுபோல், நீ எல்லாப் போட்டிகளிலும் கலந்துகொண்டு முதல்பரிசு பெற வேண்டும் என வாழ்த்துகிறேன்.

இப்படிக்கு,

உன் அன்புத் தோழன்,

ம. செழியன்.

உறைமேல் முகவரி

பெறுநர்

ச. எழிலன்,

த/பெ. த. சங்கர்,

25, பாரதி நகர்,

மதுரை – 04.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

THIRAN_Tamil_9th_THB_2025 .indd 59 8/14/2025 6:10:29 PM

## அலுவலகக் கடிதம்

**பழுதடைந்த சாலையைச் சீரமைக்க வேண்டி மாநகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் எழுதுக.**

அனுப்புநர்

அ. தமிழரசன்,
த/பெ. க.அன்பரசன்,
2 , கவிமணி தெரு, வில்லிவாக்கம்,
சென்னை–49.

பெறுநர்

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சென்னை – 01.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: பழுதடைந்த சாலையைச் சீரமைக்க வேண்டி விண்ணப்பம்.

வணக்கம், நான் சென்னை மாநகராட்சி, வில்லிவாக்கத்தில் அமைந்துள்ள கவிமணி தெருவில் வசித்து வருகிறேன். எங்கள் பகுதியில் ஏறத்தாழ ஆயிரம் மக்கள் வாழ்கின்றனர். கடந்த ஒருவாரமாகப் பெய்த மழையினால் சாலை மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது. நாள்தோறும் அலுவலகத்திற்கும் பள்ளிக்கும் செல்பவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். சாலை மிகவும் குண்டும் குழியுமாக இருப்பதால் அடிக்கடி விபத்துகளும் ஏற்படுகின்றன. எனவே, பழுதடைந்த சாலையைச் சீரமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அ .தமிழரசன்.

இடம் : வில்லிவாக்கம்
நாள் : 19.09.2025

உறைமேல் முகவரி

பெறுநர்

மாநகராட்சி ஆணையர் அவர்கள்,
மாநகராட்சி ஆணையர் அலுவலகம்,
சென்னை – 01.

அலகு 9இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.

## கற்றல் கற்பித்தலில் வளம்சேர்க்க

தொலைவில் உள்ளோருக்குக் கருத்தைத் தெரிவிக்கப் புகையில் தொடங்கி ஒலியில் வளர்ந்து விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனப் பல்வேறு உயிரினங்களால்



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 60 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:29 PM

www.kanimaths.com

தொடரப்பட்டது. இன்று அஞ்சலில் நிலைபெற்றுள்ளது அத்தகவல் பரிமாற்றம். அதுவே இன்று மின்னஞ்சல் உள்ளிட்ட புதுப்புதுப் படிநிலைகளில் வளர்ந்து கொண்டே வருகிறது. பரிமாற்றங்கள் எவ்வாறாக இருப்பினும் உயர்வான கருத்தும் உயிர்ப்புள்ள மொழியுமே செய்தி அளிப்பவருக்கும் பெறுபவருக்குமான உறவுப் பாலத்தை உறுதியாக்குகிறது.

கடிதம் எழுதுதல் ஒரு சிறந்த கலை. கடிதம் அல்லது மடல் எனப்படுவது இருவருக்கிடையே இடம்பெறும் தகவல் பரிமாற்றத்தைக் குறிக்கிறது.

### கடித வகைகள்

கடிதங்களை இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. உறவுமுறைக் கடிதம்

உறவினர்கள், நண்பர்களுக்கு எழுதுவது.

2. அலுவலகக் கடிதம்

பல்வேறு அலுவல் சார்ந்து தனிநபர் (அ) ஒரு குழு, உரிய அலுவலர்களுக்கு விண்ணப்பித்தல்.

### உறவுமுறைக் கடித அமைப்பு

| | | |
|---|---|---|
| 1. | முகவரி | கடிதம் எழுதுபவர் முகவரி |
| 2. | விளித்தல் | அன்புள்ள தோழனுக்கு / அன்புள்ள தோழிக்கு / அன்புள்ள மாமாவிற்கு / அன்புள்ள அத்தைக்கு |
| 3. | கடிதச் செய்தி | கடிதத்தின் மையப் பொருள் |
| 4. | கடித முடிப்பு | கடித முடிப்பு வாழ்த்து, கையொப்பம் |
| 5. | உறைமேல் முகவரி | கடிதம் பெறுபவர் முகவரி |

### அலுவலகக் கடிதம் எழுதும் முறை/அமைப்பு

அலுவலகக் கடிதத்தில் பின்வருவன இடம்பெறுதல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1. | அனுப்புநர் முகவரி | கடிதம் எழுதுபவர் முகவரி |
| 2. | பெறுநர் முகவரி | அலுவலக முகவரி |
| 3. | விளித்தல் | மதிப்பிற்குரியீர், ஐயா, அம்மையீர் |
| 4. | பொருள் | கடிதத்தின் மையப் பொருள் |
| 5. | உடற்பகுதி | கடிதத்தின் விளக்கப் பொருள் |
| 6 | கடித முடிப்பு | கடித முடிப்பு, கையொப்பம் |
| 7 | இடம் | கடிதம் எழுதும் இடம் |
| 8 | நாள் | கடிதம் எழுதும் நாள் |
| 9 | உறைமேல் முகவரி | கடிதம் பெறுபவர் முகவரி |



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 61
Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
8/14/2025 6:10:29 PM

www.kanimaths.com

# 10 கட்டுரை எழுதுதல்

நாள் : 19, 20

## கற்றல் விளைவு

◈ தேவை, தலைப்பின் அடிப்படையில் கடிதம், கட்டுரைகளை எழுதுவர்.

## கட்டுரை எழுதுதல்

மாணவர்களுடன் கலந்துரையாடி 'யானை' பற்றிய தகவல்களைத் தொடர்களாகக் கூறச்செய்யுங்கள். மாணவர்கள் கூறும் தொடர்களைக் கரும்பலகையில் / குறிப்பேட்டில் வரிசையாக எழுதுங்கள் / எழுதச் செய்யுங்கள்.

யானை பற்றி எழுதிய தொடர்களில் தொடக்கத்தில் முன்னுரையாக இடம்பெற வேண்டிய தொடர்கள், பொருளுரைப் பகுதியில் இடம்பெற வேண்டிய தொடர்கள், இறுதியில் தொகுத்துச் சொல்ல வேண்டிய முடிவுரைப் பகுதிக்கான தொடர்கள் என்ற அடிப்படையில் பிரித்துக்கொள்ள வழிகாட்டுங்கள்.

www.kanimaths.com

**பின்வரும் வகையில் தொடர்கள் இருக்கலாம்.**

◈ நிலத்தில் வாழும் விலங்குகளில் யானை மிகப் பெரியது.

◈ யானைகள் பெரும்பாலும் ஆசியா மற்றும் ஆப்பிரிக்கா கண்டங்களில் காணப்படுகின்றன.

◈ யானைகள் கூட்டம் கூட்டமாக வாழும் தன்மை உடையவை.

◈ யானைக் கூட்டத்திற்குப் பெண் யானை தலைமை வகிக்கிறது.

◈ யானைகள் இலை தழைகள், புற்கள், மரக்கிளைகள், பழங்கள் போன்றவற்றை விரும்பி உண்ணும்.

◈ யானைகள் தாவர உண்ணி வகையைச் சார்ந்தவை.

◈ யானைகள் நினைவாற்றல் திறன் மிகுந்தவை.

◈ யானைகளுக்கு நீளமான தும்பிக்கை உண்டு.

◈ யானை, தன் தும்பிக்கையைத் தண்ணீர் குடித்தல், உணவு உண்ணுதல், மரக்கிளைகளை உடைத்தல், உடலைச் சுத்தம் செய்தல், பாரம் தூக்குதல் போன்ற பல்வேறு பணிகளுக்குப் பயன்படுத்தும்.

◈ யானை மிகவும் அன்பான விலங்கு. தன் குட்டிகளை மிகவும் பாசத்துடனும் அரவணைப்புடனும் வளர்க்கும்.

◈ யானைகள் ஏறக்குறைய 60 முதல் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழும்.



Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education
THIRAN_Tamil_9th_THB_2025 .indd 62 8/14/2025 6:10:29 PM

www.kanimaths.com

- யானைகள் காட்டிற்குள் தொடர்ந்து பல மைல் தொலைவுகள் நடந்து கொண்டேயிருக்கும். இதன் மூலம் காட்டிற்குள் விதைப் பரவலுக்கு வழிவகை செய்கிறது.
- காடுகள் அழிக்கப்படுவதால் யானைகள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. தங்கள் வாழ்விடத்தை இழக்கின்றன. உணவு மற்றும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிப்பிற்குள்ளாகின்றன.
- யானைகள் மிகவும் கம்பீரமான அழகான ஆற்றல் வாய்ந்த விலங்கினம்.
- யானைகளின் தந்தத்திற்காக யானைகள் கொடூரமாக வேட்டையாடப்படுகின்றன.
- காடுகளைப் பாதுகாப்பதில் யானைகளின் பங்கு மிகவும் இன்றியமையாதது.
- உலக யானைகள் தினம் ஆகஸ்டு 12ஆம் நாள் கொண்டாடப்படுகிறது.
- யானைகள் தினத்தில் கல்வி நிலையங்கள் வனத்துறை போன்ற பல்வேறு சமூக அமைப்புகள் யானைகள் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்துகின்றன.
- சுற்றுச்சூழலை, வனப்பகுதிகளைப் பாதுகாப்பதிலும் உயிரினச் சமநிலையைப் பேணுவதிலும் முக்கியப் பங்காற்றும் யானைகளைப் பாதுகாப்போம்.

முன்னுரை, பொருளுரை, முடிவுரை என வகைப்படுத்திய தொடர்களை இணைத்துக் கட்டுரையாக எழுத மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

### கட்டுரையின் அமைப்பு

கட்டுரை என்பது முன்னுரை – பொருளுரை – முடிவுரை ஆகியவற்றைக் கொண்டு விளங்க வேண்டும். முன்னுரையும் முடிவுரையும் சிறுசிறு பகுதிகளாக அமைய வேண்டும்.

**முன்னுரை** : இது அறிமுக உரை. கட்டுரையில் என்ன எழுதப் போகிறோம் என்பதன் அறிமுகமாக அது அமைய வேண்டும். எழுதப்புகும் கருத்தை வகுத்துக் காட்டுவதாக இருக்க வேண்டும். முன்னுரையைப் படித்தாலே கட்டுரையின் சிறப்புத்தன்மை விளங்கும் வகையில் அமைய வேண்டும். மேற்கோள்களை எழுதலாம்.

**பொருளுரை** : எடுத்துக்கொண்ட கருத்தைப் பல வழிகளில் / தலைப்புகளில் விளக்கிக் கூறும் பகுதியாகும். சிறுசிறு பகுதிகளாகப் பிரித்து எழுதுதல் வேண்டும். எடுத்துக்கொண்ட தலைப்புகளுக்கேற்ப உள் தலைப்புகள் பலவற்றையும் கொண்டதாகப் பொருளுரை அமைய வேண்டும்.

**முடிவுரை** : கட்டுரையில் கூறப்பட்ட செய்திகளைத் தொகுத்துக் கூறுவதாக அமைய வேண்டும். மிகவும் நீளமாக எழுதுதல் கூடாது. சுருக்கமாக எழுத வேண்டும்.

அலகு 10இல் பயிற்சி நூல் செயல்பாடுகளை மேற்கொள்ளச் செய்யுங்கள்.



THIRAN_Tamil_9th_THB_2025 .indd 63 Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education 8/14/2025 6:10:29 PM

www.kanimaths.com

# THIRAN

## (Targeted Help for Improving Remediation & Academic Nurturing)

ஓர் அழைப்பு உங்கள் வாழ்க்கையை மாற்றும் (18 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கான 24×7 கட்டணமில்லாத் தொலைபேசி எண்கள்)

குழந்தைத் திருமணம், குழந்தைத்
தொழிலாளர் போன்ற பாதிப்புகளுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த
துன்புறுத்தலுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?

அழையுங்கள் குழந்தை உதவி எண் 1098
உங்கள் விவரங்கள் பிறருக்குத்
தெரியாமல் பாதுகாக்கப்படும்

மனம், உடல் மற்றும் பாலியல் சார்ந்த
துன்புறுத்தலுக்கு அல்லது
அச்சுறுத்தலுக்கு
உள்ளாக்கப்படுகிறீர்களா?
பாதுகாப்பற்ற சூழலில் உள்ளீர்களா?
தேர்வு மற்றும் உயர்கல்விக்கு
வழிகாட்டுதல் தேவையா?

அழையுங்கள் 14417
உங்கள் விவரங்கள் பிறருக்குத்
தெரியாமல் பாதுகாக்கப்படும்

Visit Link : https://www.youtube.com/@KaniMaths-Education

# KANI MATHS

No.1 Educational Website & You-tube Channel

கீழே கொடுக்கப்பட்டுள்ள **Click Here** என்ற வார்த்தையை பயன்படுத்தி அனைத்து வகுப்பிற்கும் அனைத்து பாடங்களுக்கும் **Study Materials** மற்றும் **Question Paper** களை நமது **www.kanimaths.com** என்ற இணைய தளத்தில் பார்த்து **Pdf** - இல் பதிவிறக்கம் **download** செய்து கொள்ளலாம்.

**Website Home Page:** CLICK **Youtube Channel Home Page:** CLICK

| Sl. No | Content | File Type | Sl. No | Content | File Type |
|---|---|---|---|---|---|
| 1 | STD 1 | Click Here | 13 | Notes of Lesson | Click Here |
| 2 | STD 2 | Click Here | 14 | Competitive Exam | Click Here |
| 3 | STD 3 | Click Here | 15 | Focus Learners | Click Here |
| 4 | STD 4 | Click Here | 16 | Books and Guide | Click Here |
| 5 | STD 5 | Click Here | 17 | Teacher Details | Click Here |
| 6 | STD 6 | Click Here | 18 | Leave Details | Click Here |
| 7 | STD 7 | Click Here | 19 | EMIS | Click Here |
| 8 | STD 8 | Click Here | 20 | After +2 | Click Here |
| 9 | STD 9 | Click Here | 21 | புயல் | Click Here |
| 10 | STD 10 | Click Here | 22 | சிறார் திரைப்படம் | Click Here |
| 11 | STD 11 | Click Here | 23 | கலைத்திருவிழா | Click Here |
| 12 | STD 12 | Click Here | 24 | தினம் ஒரு புத்தகம் | Click Here |

If Click Icon then Join Group

WhatsApp WhatsApp WhatsApp WhatsApp

SUBSCRIBE KANI MATHS EDUCATION YOUTUBE CHANNEL